அரசு ஊழியர்

மாத இதழ்

2023 பிப்ரவரி

மலர்:44 இதழ்:02

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:
மு.அன்பரசு, மு.பாஸ்கரன்,
தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன்,
கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி,
சா.டானியல் ஜெயசிங்,
சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

முகவரி:
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20

இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...

1. **இழந்ததை மீட்க, இருப்பதைக் காக்க இணைந்தே எழுவோம், போராடிப் பெறுவோம்!**
*தலைவர் மடல் ................................4*

2. **ஒன்றிய அரசின் பட்ஜெட் யாருக்காக ?**
பொதுச் செயலாளர் மேசையிலிருந்து..................................7

3. **அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் மற்றும் மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம் நடத்திய மாநில மாநாடு**....................................10

4. **2023 பிப்ரவரி 10 மாவட்ட தலைநகரங்களில் கோரிக்கை பேரணி**................................15

5. **பழைய பயனளிப்பு ஓய்வூதியம் சாத்தியமே!**..........................................19

6. **போற்றுதலுக்குரியவர்கள்!**.........................22

7. **பொது மக்களை கடைந்து எடுத்த அமிர்தம்!** ..........................................23

8. **சிங்கப் பெண்களின் சங்கம மாநாடு!**........29

9. **நீ போட்டு வைத்த பீட் ரூட்டில் இந்த இயக்கம் தலை நிமிர்ந்து நடக்கும்!**...........31

10. **போராட்டங்களை திட்டமிடுவதில் திறமையானவர் தோழர் சுந்தரம்மாள்!**........32

11. **மோசடிக்குள் ஒளிந்திருக்கும் ஆசாமிகள் யார்?**.................................33

12. **மகனே இன்னும் உன் நினைவே!**..........34

# இழந்ததை மீட்க, இருப்பதைக் காக்க இணைந்தே எழுவோம், போராடிப் பெறுவோம்!

``உங்களால் மக்களை அவர்களின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடிந்தால் அவர்களை எளிதில் சம்மதிக்க வைக்க முடியும்`` என்ற தோழர் காரல் மார்க்ஸ் அவர்களின் தத்துவத்தை ஆட்சியாளர்கள் பின்பற்றி வருகிறார்கள். அதனால்தான் அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக இருந்து வரும் அரசு ஊழியர்களை அவர்கள் துண்டித்துவிடத் துடிக்கிறார்கள். ரத்தம் சிந்தி பெற்ற உரிமைகள், வியர்வை வழிய நடத்திய போராட்டங்கள் போன்றவற்றை, தொடர்ந்து வீசப்படும் அடக்குமுறைகளாலும் ஆட்குறைப்பு, சம்பளக்குறைப்பு, சலுகைகள் வெட்டு போன்ற நடவடிக்கைகளாலும் ஒழித்துக்கட்டப் பார்க்கிறார்கள். ஒரேயடியாக முடியாவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து மொத்தமாக அரசு ஊழியர்களை முடித்துக் கட்டிவிட மத்திய அரசும் சரி (பல) மாநில அரசுகளும் சரி முனைப்புடனேயே இருக்கின்றன. அரசு ஊழியர் வர்க்கத்தின் கடைசி ஊழியன் இருக்கும் வரை இவர்களுடைய கனவு பலிக்கப் போவதில்லை அதனால்தான் நீண்டநெடிய வரலாற்றை கொண்ட ஊழியர் இயக்கத்தை வரலாற்றிலிருந்து பிரிக்கப்பார்க்காமல் ஒழிக்கப் பார்க்கிறார்கள். அப்படி ஒரு தோன்றுமானால் அந்த நாளில் இந்திய நாடு சர்வாதிகார நாடாக மாறியிருக்கும் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம்.

ஆட்சியாளர்கள் என்ற அரசியல்வாதிகள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசாங்கத்தில் ஊதியம் பெறும் அனைவரையும் தேவையில்லாத தொங்குசதைகளாக பார்ப்பதன் காரணங்கள் மிகவும் அற்பமானதாக உள்ளது. மாதந்தோறும் அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, அரசாங்கத்தில் பணிபுரியும் இதர பிரிவினர்களுக்கு கணிசமான நிதியை, ஊதியமாக அரசாங்கம் கொடுப்பதிலிருந்து விலகிக் கொண்டால் அரசுக்கு பெரிய தொகை மிச்சமாகும் என்ற கணக்கு மிகவும் அபத்தமானது. அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பதிலும், அரசாங்கத்தின் இரகசியங்களை காப்பதிலும் அரசினை செம்மையாக நடத்த உதவுவதிலும் அரசு ஊழியர்களின் பங்களிப்பு மகத்தானது என்கிற நிதர்சனத்தை எந்த ஆட்சியாளரும் கவனத்தில் கொள்வதாக தெரியவில்லை. அரசு ஊழியர்கள் செய்கிற வேலைகளை தனியார்வசம் ஒப்படைத்து விடுவதிலேயே அக்கறை காட்டும் அரசாங்கம் அவர்களால் மக்கள் நலத்திட்டங்களை கடைக்கோடி பொதுஜனம்வரை கொண்டு போய் சேர்க்க முடியுமா? என்பது குறித்து சிந்திக்காமல் இருக்க வாய்ப்பில்லை. திட்டத்தை கொண்டுபோய் சேர்க்காவிட்டால் என்ன? குடிமுழுகிவிடவா போய்விடும் என்பது அவர்களின் சிந்தனையாக உள்ளது. இந்த தனியார்மய நகர்வு அரசு ஊழியர்களை மட்டும் பாதிப்புக்கு உள்ளாக்கப் போவதில்லை. அரசு வேலை தேடும் இளைஞர்களின் எதிர்காலத்தை இது கேள்விக்குறியாக்கிவிடும் ஆபத்தை உள்ளடக்கிய திட்டமாக இந்த தனியார்மயம் உள்ளது. இதனை இன்னொரு கோணத்தில்சிந்தித்துப் பார்த்தால் அரசுத்துறைகளை தனியார்மயப்படுத்தியபின் மக்களுக்கான நலத் திட்டங்களுக்கும் ஒவ்வொன்றாக மூடுவிழா காணப்படும் அபாயகரமும் இதில் உள்ளது. ஏற்கெனவே பக்கத்தில் உள்ள பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் ரேஷன்கடைகள் மூடப்பட்டு ரேஷன்கார்டுதாரர்களின் வங்கிக்கணக்கில் பணம் சேர்க்கும்முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த சொற்பதொகையை கொண்டு ரேஷன்கடைகளில் கொடுக்கப்படும் அளவுக்கு அரிசி மற்றும் தானியங்களை வாங்கமுடியுமா என்பதும் இந்த தொகை தொடர்ந்து கொடுக்கப்படுமா அல்லது எரிவாயு சிலிண்டருக்க மானியம் வழங்கிய கதைபோல் ஆகிவிடுமா என்ற அச்ச உணர்வும்

அந்தப் பிரதேச மக்களிடம் உள்ளது.

அதனால்தான் இந்த தனியார்மயம் என்ற நச்சுவிஷம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை மட்டும் பாதிக்கப் போவதில்லை. நம்மையும் தாண்டி, இளைய தலைமுறையினரையும், வருங்கால சந்ததியினரையும் வீதிக்கு கொண்டு வந்து நிறுத்திவிடும் அபாயத்தை கொண்டுள்ளது என்பதை நாம் மக்களுக்கும் வேலைவாய்ப்பைத் தேடித் தவிக்கும் இளையதலைமுறையினருக்கும் உணர்த்த வேண்டிய கடமை உள்ளது. இந்த நாட்டு மக்களை அவர்களின் வரலாற்றிலிருந்து பிரித்துவிட மத்திய அரசும் தமிழக அரசும் கங்கணம் கட்டிக்கொண்டு மிகமிக ரகசியமாக ஈடுபட்டு வருகின்றன. அவற்றைத் தடுக்கும் முன்வரிசை பொறுப்பு அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ளது.

அரசு ஊழியத்தின் மேல் பலருக்கும் ஒரு ஈர்ப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருந்த பழைய ஓய்வூதியத் திட்டத்தை 1990களிலேயே ஒழித்துக்கட்டிவிட நடவடிக்கை எடுத்தது மத்திய அரசு. இதில் நாம் குறிப்பாக எந்த கட்சியினரையும் சொல்லவில்லை. இந்தியாவில் அரசாண்ட இரண்டு கட்சிகளுமே பழைய பென்சன் திட்டத்தை நீக்கிவிட முனைப்பு காட்டின. இதன்மூலம் ஆட்சிசெய்த அரசியல்வாதிகள் அனைவரும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை ஒழித்துக் கட்டுவதன் மூலம் கஜானாவை காலியாகாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தனர். அதற்காக மக்களவை மாநிலங்களவையில் தீர்மானங்கள் வைக்கப்பட்டன. ஆனால் அந்த சமத்தில் கம்யூனிஸ்ட் கட்சி எம்பிக்கள் கணிசமாக அளவில் மக்களவையில் இருந்ததால் அந்த திட்டத்தை கொண்டுவராமல் தடுத்தனர்.

இருப்பினும் 2003ல் இந்த திட்டம் மீண்டும் மாநிலங்களவையில் இந்த திட்டம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அன்றைய தினத்தில் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா அம்மையார் இந்தியாவிலேயே முதன்மாநிலமாக அதை அறிவித்தார். புதிய ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்ப கட்டத்திலிருந்தே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எதிர்த்து வந்துள்ளது. 2006ல் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் திமுக ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டம் பரிசீலிக்கப்படும் என்று கூறி அதன்மூலம் ஆட்சிகட்டிலைப் பிடித்தார். 2011ல் ஜெயலலிதா அம்மையார் தான் போட்ட திட்டத்தை தானே திரும்பப் பெறுவதாக தேர்தல் நேரத்தில் வாக்குறுதி வழங்கினார். அவரை நம்பி வாக்களித்த அரசு ஊழியர்களை ஏமாற்றினார். பொறுமையிழந்து அரசு ஊழியர்கள் கோட்டையை முற்றுகையிட்டு சட்டமன்றம் நடந்து கொண்டிருந்த நேரத்தில 10 நாட்களுக்கு மேலாக போராடியதால் பழய ஓய்வூதியத் திட்டத்திற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கான ஐ.ஏ.எஸ்.அதிகாரியின் தலைமையில் ஒரு குழு அமைத்து அதன் காலவரையரை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நீட்டிக்கப்பட்டு வந்துள்ள.

கடந்த சட்டமன்றத் தேர்தலில், ஆட்சிக்கு வந்தால் பறிக்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்டுள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் உரிமைகள் அனைத்தும் மீண்டும் வழங்கப்படும் என முழங்கிய திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தான் ஆட்சிக்கு வந்தபின் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை பரிசீலிப்பதற்கு பதிலாக நகராட்சியில் உள்ள காலிப்பணியிடங்களை புதிய ஊழியர் அவுட்சோர்சிங் முறையில் நிரப்பிக் கொள்ள ஆணைகள் பிறப்பித்ததையும் அரசு உழியர்கள் மற்றும் அனைத்து கட்சியனரின் கடும் கண்டனத்தினால் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதையும் நாம் அனைவரும் அறிவோம்.

நாமும் நம்மைப்போன்ற பல இயக்கங்களும் அனைத்தையும் எதிர்த்து நிற்பதால் அரசு உழியர் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இயக்கத்திலிருந்து நம்மை பிரித்து எடுக்க பல சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அரசாங்கம் என்பது மக்களுக்கானது என்பது விளம்பர பேனராக நிறுத்தப்பட்டு, உள்ளே சுயநலம், அதிகாரம் போன்றவற்றுக்கான வெட்டுக்குத்து சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆக ஆட்சியாளர்களோ அரசியல்வாதிகளோ

ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் எதிர்காலத்தைப் பற்றியோ முன்னேற்றத்தைப் பற்றியோ சமுதாக அக்கறையோடு அவற்றை அணுகவில்லை என்பதிலிருந்து அவர்களை நம்மிடம் கூறுபவை அனைத்தும் பசப்பு வார்த்தைகளே அன்றி வேறில்லை என்பதையும், ஓட்டுச்சீட்டு என்ற ஒரு காரணத்திற்காக நம் முதுகை வருடி சுண்ணாம்பு தடவ காத்திருக்கிறார்கள் என்பதையும் நாம் இனியும் உணராதிருப்பது வரலாற்றுப்பிழையை ஏற்படுத்தி விடும்.

புதிய பென்சன் மற்றும் பறிக்கப்பட்ட உரிமைகளை வழங்காதிருத்தல், தனியார் மய நடவடிக்கைகள், போன்றவற்றின் மூலம் அரசு ஊழியர் என்ற ஆலமரத்தின் வேரையும் தனியார் மய நடவடிக்கைகள் மூலம் இந்த இயக்கம் என்ற ஆலமரத்தின் விழுதுகளையும் வீழ்த்திவிட நினைக்கிறார்கள். நாம் இனிமேலும் இருக்கின்ற இடத்திலேயே இருந்து கொண்டு இயக்கம் வீழ்ந்துவிட துணை நிற்காமல் இருக்கையிலிருந்து எழுந்து வந்து, இழந்து நிற்கும் உரிமைகளை மட்டுமல்ல, அதிகாரவர்க்கம் வீழ்த்திவிடத்துடிக்கும் வரலாற்றையும் காக்கும் பெரும்பொறுப்பில் நம்மைநாம் ஈடுபடுத்திக் கொள்வோம். இதற்காக நமது இயக்கம் முன்னெடுத்து நடத்திக் கொண்டிருக்கும் இயக்க நடவடிக்கைகளில் தன்னெழுச்சியாக கலந்து கொள்ள வேண்டுவதுடன், பக்கத்து இருக்கையில், பக்கத்து அறையில், பக்கத்து அலுவலகத்தில் உள்ள அரசு ஊழியர்கள் அனைவரையும் கீழ்க்கண்ட இயக்கப் போராட்டங்களில் பங்கெடுக்க வைப்பதை நமது கடமையாக நிகழ்த்தி இழந்து விட்ட உரிமைகளை மீட்போம், இருக்கின்ற உரிமைகளைக் காப்போம், புதிய உரிமைகளை போராடிப் பெறுவோம்.

**மாவட்ட அளவிலான கோரிக்கைப் பேரணி**

வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்தி 10.02.2023 அன்று மாவட்ட அளவிலான பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் பங்கேற்றிடும் வகையிலான கோரிக்கைப்பேரணியை நடத்திடுவது

**ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம்**

வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்தி, பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப்பெற்றிட 28.3. 2023 அன்று லட்சக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்கும் வகை யில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை நடத்திடுவது.

**கோட்டை முற்றுகை**

அரசு நிறைவேற்றிடத் தவறும் பட்சத்தில் தமிழக அரசிடம் நியாயம்கேட்டு வரும் பட்ஜெட் கூட்டத்தொடரின்போது கோட்டை முற்றுகை. ●

## சூடா ஒரு கோப்பை சூப்

### பெயருக்குத்தான்!

கள்ளிக்காட்டில் ஐயனார்
கரட்டு மேட்டில் கருப்பண்ணன்
பனைமரத்தடியில் பாண்டிமுனி
பொட்டலில் பொம்மக்கா
நடுக்காட்டில் நல்லதங்காள்

காற்றிலும் பனியிலும்
கடுங்கோடை மழையிலும
குறையாது கம்பீரம்!
கூட கோபுரமும்
மாடமாளிகையும்
இல்லாது போனாலும்
குறையாது காவல்!

நாள் தவறாது
மடப்பள்ளி நைவேத்யம்
மனமகிழ உண்டு,
பள்ளியறையில் ஆனந்தமாய்
ஆலிங்கனம் கொண்டு,
நாழிகை பார்த்து நடைசாத்தும்
பெருந்தெய்வங்களெல்லாம்
பெயருக்குத்தான்!

- ஸ்ரீதர் பாரதி

# ஒன்றிய அரசின் பட்ஜெட் யாருக்காக ?

ஒன்றிய அரசின் 2023-24 நிதியாண்டிற்கான பட்ஜெட்டை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க பட்ஜெட் என்று பாராட்டியுள்ளார். அதை தொடர்ந்து வளர்ந்து வரும் இந்தியாவின் மகத்தான நோக்கத்தை நி்வேற்றி இந்த பட்ஜெட் வலுவான அடித்தளத்தை உருவாக்கும் இந்த பட்ஜெட் பின் தங்கியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இதற்காக நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன்ஜி மற்றும் அவரது குழுவை நான் வாழ்த்துகிறேன். இது வரலாற்று பட்ஜெட் என்று பிரதமர் டுவிட்டரில் பதிவிட்டிருக்கும் நிலையில், இந்த பட்ஜெட்டும் வழக்கம் போல் பெரு முதலாளிகளின் நலனை மனதில் வைத்தே உருவாக்கப்பட்டுள்ளதாகவும், ஏழை, நடுத்தர மக்களின் சுமையை, வேலையின்மையை, விலைவாசி உயர்வை மேலும் அதிகரிக்கவே இந்த பட்ஜெட் வழி வகுக்கும் என்று இடதுசாரிகள் உள்ளிட்ட அனைத்து எதிர் கட்சிகளும் தங்களின் கடுமையான கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

இந்தியாவும் உலகமும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் ஒன்றிய அரசின் பட்ஜெட் இந்தியாவின் பொருளாதார பெருந்தொற்று காலத்திற்கு முன்பே மந்த நிலையில் இருந்துது. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் பின்னர் பெருந்தொற்று காலத்திற்குப் பின்பும் மேலும் மோசம் அடைந்து பொருளாதார மந்தத்தை நோக்கி செல்லக்கூடிய சமயத்தில் வந்திருக்கிறது. இந்த பட்ஜெட்டானது மக்களுக்கு வேலை வாய்ப்பை பெருக்கி உள்நாட்டுத் தேவையை அதிகப்படுத்துவதன் மூலம் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரித்திடும் விதத்தில் முக்கியமான பிரச்சினைகளில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் பட்ஜெட் இவ்வாறு பிரச்சினையை எதிர்கொள்வதில் தோல்வி அடைந்திருக்கிறது. மாறாக நிதிப் பற்றாக்குறையை சரி செய்வதற்காக அரசாங்கத்தின் செலவினங்களை மேலும் வெட்டிக் குறைத்துள்ளது. பணக்காரர்களுக்கு மேலும் வரிச்சலுகைகளை அளித்திருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டின் செல்வ வளத்தில் 40.5 விழுக்காட்டை நாட்டில் உயர்ந்த நிலையில் உள்ள ஒரு விழுக்காட்டினர் எடுத்துச் சென்றுள்ளனர் என்று ஆஸ்பாம் அறிக்கை கூறுகிறது. ஆனால் பட்ஜெட்டில் செல்வந்தர்களுக்கு வரிச் சலுகைகளை அளித்திருக்கிறது. இவ்வாறு ஒரு முரண்பட்ட பட்ஜெட்டை தாக்க செய்திருப்பதன் மூலம் பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகமாவதற்கே இட்டுச் செல்லும் நிலை ஏற்படும்.

2022-23 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளை விட 2023-24ஆம் ஆண்டுக்கான மொத்த அரசாங்கத்தின் செலவினம் வெறும் 7 விழுக்காடு அளவே அதிகரித்திருக்கிறது. இந்த காலகட்டத்தில் பணவீக்கத்துடன மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பது என்பது 10.5 விழுக்காடாக இருக்கும் என்று மதிப்படப்படுள்ளது. இவ்வாறு மொத்த உள்நாட்டு உற்பத்தி விழுக்காட்டிலும் அரசாங்கத்தின் செலவினம் வெட்டப்பட்டிருக்கிறது. வட்டி மூலம் வழங்கப்படும் தொகைகளை (interest payment) ஒதுக்கிவிட்டோம் என்றால் பின் இந்த செலவினம் என்பது சென்ற ஆண்டைக் காட்டிலும் 5.4 விழுக்காடு மட்டுமே அதிகமாகும்.

பணவீக்க விகிதம் 4 விழுக்காடாக இருப்பதையும் மக்கள் தொகை சுமார் 1 விழுக்காடு உயரக்கூடும் என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டோமானால் இந்த பட்ஜெட்டானது பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத் தரங்கள் மீது மேலும் கொடூரமான தாக்குதல் தொடுத்திருக்கிறது என்றே கூற வேண்டும்.

**தனிநபர் வருமான வீழ்ச்சி**

தற்சமயம் வெளியாகியிருக்கும் முதல் மதிப்பீடுகளின்படி இந்தியாவின் உண்மையான தேசிய தனிநபர் வருமானம் 2019 - 20 கோவிட் பெருந்தொற்றுக்கு முன்பிருந்த அளவை காட்டிலும் வெறும் 2.4 விழுக்காடு அளவிற்குத்தான் அதிகரித்திருக்கிறது. உண்மையில் இது ஒவ்வோராண்டும் வளர்ச்சி விகிதம் குறைந்தது 1 விழுக்காடாவது இருக்க வேண்டும்.

இதே கால கட்டத்தில் பணவீக்க விகிதங்களில் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. எனவே தான்

விலைவாசி மிகவும் அதிகரித்திருக்கிறது. தொழிற்துறையில் நெருக்கடி மிகவும் மோசமாக எதிரொலித்து உற்பத்தித்துறையில் 2022-23ல் சென்ற ஆண்டை காட்டிலும் வெறும் 1.6 விழுக்காடுதான் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. கார்ப்பரேட்டுகளுக்கு வெண்சாமரம் வீசும் ஒன்றிய அரசாங்கத்தின் வர்க்க சார்பு அணுகுமுறை காரணமாக இந்த நெருக்கடியிலிருந்து மீள்வது என்பதும் சமமற்ற முறையில் இருந்து வருகிறது. 2019-20 மற்றும் 2022-23க்கு இடையேயான காலத்தில் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி (Nominal GDP)யில் ஏற்பட்டுள்ள உயர்வை காட்டிலும் கார்ப்பரேட்டு மற்றும் வருமான வரிகளின் மூலம் வருவாய் அதிகரித்திருப்பதே இதற்கு நிரூபணமாகும்.(முதலாளிகளுக்கு வரிச்சலுகை 10.72லட்சம் கோடி)

**வேலையின்மை**

வேலையில்லாத் திண்டாட்டம் வரலாற்றில் இதற்கு முன் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ள நிலையில் கார்ப்பரேட்டுகளின் லாபப் பங்குகளும் வருமானங்களும் உயர்ந்துள்ள போதிலும் அவர்கள் மீது விதிக்கப்படும் வரி விகிதங்களில் உயர்வு இல்லை. இதன் விளைவு வருமானத்தில் ஒட்டுமொத்த தேக்க நிலை ஏற்பட்டதால் உழைக்கும் மக்கள் தங்கள் வேலைகளை இழந்துள்ளார்கள். வேலையின்மை அதிகரித்திருப்பதன் காரணமாகவும் வேலையில் இருப்பவர்கள் வாங்கக்கூடிய ஊதிய விகிதங்கள் குறைந்திருப்பதன் காரணமாகவும் நாட்டின் சராசரி வருமானம் என்பது 2019-20ல் இருந்ததைக் காட்டிலும் குறைந்திருக்கிறது.

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் ஒன்றிய அரசாங்கம் பொது செலவினத்தை அதிகரித்து வேலையின்றி இருந்த பல லட்சம் இந்தியர்கள் இறப்பதை தடுத்திட முன்வரவில்லை. இந்த நிலை 2022 நவம்பர் வரையிலும் நீடித்தது.

2021ல் தொழிலாளர்கள் 1 லட்சத்து 64 ஆயிரத்து 33 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்.

ஒன்றிய அரசன் நிதி கொள்கை காரணமாக அதிகரித்து வரும் சமத்துவமின்மைய சரி செய்ய கூடிய நிலை இல்லை. பொருளாதார மந்த நிலையைச் சரி செய்து அதனை ஊக்குவிக்கக்கூடிய நிலையும் இல்லை. பொருளாதார எதார்த்த நிலைமைகளை நன்றாக உற்று பார்க்க ஒன்றிய அரசு தயாராக இல்லை. இதனை நன்றாகவே நம்மால் பார்க்க முடிகிறது. கோவிட் பெருந்தொற்றை மோசமாகக் கையாண்டதன் காரணமாக மனித குலத்திற்கு ஏற்பட்ட மாபெரும் துயரார்ந்த நிலையை சரி செய்திட இப்போதும் ஒன்றிய அரசு தயாராக இல்லை.

**வறுமையில் தள்ளும் ஒன்றிய அரசு**

ஒன்றிய அரசு பொதுச் சொத்துக்களை தனியாருக்கு தாரை வார்பபது, பொதுச் சொத்துக்களை விற்று பணமாக்குவது, ராணுவம் மற்றும் இன்சூரன்ஸ் துறையில் அந்நிய முதலீட்டை அனுமதிப்பது இவை அனைத்தையும் (ஆத்மநிர்பன் பாரத் ) (தற்சார்பு இந்தியா) என்ற பெயரில் செய்வது தொடர்கிறது.

நாட்டின் சொத்துக்களை இந்தியாவில் உள்ள ஒரு சில பெரும் முதலாளிகளிடம் ஒப்படைப்பதற்கு வழி வகை செய்திடும் விதத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனை மறைப்பதற்கு மதம் என்ற போர்வையை அணிந்திருக்கிறது.

உலகப் பொருளாதார நிலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி மேலும் தொடரக்கூடிய நிலையே இருப்பதால் இந்திய பொருளாதாரத்தின் எதிர்காலம் உண்மையிலேயே சயச்சார்பு பொருளாதாரத்தை மேற்கொள்வதையே சார்ந்திருக்கிறது. இதனை செய்வதற்கு பதிலாக, கார்ப்பரேட்டுகள் கொள்ளை லாபம் பெறுவதற்கு ஈட்டுவதைத் தடுப்பதற்கு பதிலாக தொழிலாளர் வர்க்கத்தை தண்டிககும் வகையில் சென்று கொண்டு இருக்கிறது. உழைக்கும் மக்களை என்றென்றும் வறுமையில் தள்ளும் வேலைகளில் இறங்கி இருக்கிறது.

இந்திய நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டுமானால் உள்நாட்டுச் சந்தையை பெரிய அளவிற்கு அதிகரித்திட வேண்டும். அதற்கு வரி விதிப்பு மற்றும் பொதுச் செலவினம் ஆகியவற்றை தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் வருமானம் அளிக்கக்கூடிய விதத்தில் அதன் மூலம் அவர்கள் தங்கள் தேவைகளை விரிவாக்கிக் கொள்வதற்கும் அதன் மூலம் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கும் அவர்கள் தங்கள் சுகாதாரம் மற்றும் கல்வியை மேம்படுத்திக் கொள்வதற்கும் இட்டுச் செலலக்கூடிய விதத்தில் ஏற்படுத்திட வேண்டும். இதற்கு மாறாக மத்திய பட்ஜெட், ஏழை மக்களின் முதுகில் மேலும் சுமையை ஏற்றி வரிச் சலுகைகளால் பெரும் முதலாளிகளுக்கு லாபம்,

கிடைக்க வழிவகுத்துள்ளது என்றும் இந்த பட்ஜெட் மக்களுக்கு அமிர்தம் அளிப்பதாக சொல்லி நஞ்சை அளித்துள்ளது என்றும் எதிர்கட்சிகள் விமர்சனம் செய்துள்ளன. பி.ஜே.பி. தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியசாமி ஒன்றிய அரசு பட்ஜெட் மளிகைக் கடைக்காரர் ஒருவரின் பில்லாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

### பட்ஜெட்டில் நிதி குறைப்பு (வெட்டு)

பெட்ரோலியப் பொருள்கள் மீதான மானியத்தால் கடும் வெட்டினை ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது பெட்ரோலியத்திற்கான மானியம் 6500 ரூபாய் வெட்டப்பட்டிருக்கிறது. இதனால் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி விலைவாசியை கடுமையாக உயர்த்துவதற்கு இட்டுச் செல்லும்.

கோவிட் பெருந்தொற்றின்போது நம் நாட்டின் பொது சுகாதாரத்துறை மிகவும் மோசமான நிலையில் இருந்ததிலிருந்து எவ்விதமான படிப்பினையும் ஒன்றிய அரசு கற்றுக்கொள்ளவில்லை என்பதையே பட்ஜெட் தெளிவாக காட்டுகிறது. பொது சுகாதாரத்துறைக்கு பட்ஜெட்டில் போதுமான அளவிற்கு ஒதுக்கீட்டை உயர்த்துவதற்கு பதிலாக 34 விழுக்காடு வெட்டினை ஏற்படுத்தி இருக்கிறது.

அங்கன்வாடி, சத்துணவு ஊழியர்களுக்கு எந்தவிதமாக ஊதிய உயர்வும் அளிக்கப்படவில்லை. மகாத்மா காந்தி தேசிய கிராமபுற வேலை வாய்ப்பு திட்டத்திற்கான ஒதுக்கீடு சென்ற ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் 33 விழுக்காடு வெட்டினை ஏற்படுத்தி இருக்கிறது. வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக கொண்டு வரப்பட்ட ஆத்ம நிர்பார் பாரத் ரோஜ்கார் திட்டத்திற்கான ஒதுக்கீட்டிலும் 65 விழுக்காடு வெட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### தொழிலாளர்கள் கொடுரத் தாக்குதல்

மிகவும் கொடூரமான தாக்குதல் என்பது தொழிலாளர் மீதும் தொழிலாளர் தொடர்பான ஒன்றிய அரசாங்கத்தின் திட்டங்களுக்கு சென்ற நிதியாண்டில் 23165 கோடி ரூபாய் செலவினம் ஆகியிருந்த நிலையில் இந்த பட்ஜெட்டில் அதில் பாதியளவாக அதாவது 12435 கோடி ரூபாய் வெட்டப்பட்டிருக்கிறது. ஓய்வூதியத்திற்காக ஒதுக்கீட்டுத் தொகையும் 4.2 விழுக்காடு அளவிற்கு வெட்டப்பட்டிருக்கிறது.

2014ல் அதிகாரத்தில் அமர்ந்த போது 2022க்குமுன் விவசாயிகளின் வருவமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்று கூறினார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டில் பிரதமர் கிசான் ஒதுக்கீடுகளில் 11.76 விழுக்காடு வெட்டு ஏற்படுததப்பட்டிருக்கிறது. விவசாயிகள் சம்பந்தப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடடு கடுமையாக வெட்டப்பட்டிருக்கிறது. 2022க்குள் அனைவருக்கம் வீடு வழங்கப்படும் என்று கூறிய ஒன்றிய அரசு வீட்டு வசதி திட்டங்களுக்கும் பட்ஜெட்டில் கடும் வெட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### மக்கள் விரோத – தேச விரோத பட்ஜெட்

ஒன்றிய அரசின் (மோடி) சிறுபான்மையினர், பழங்குடியினர் விரோத அணுகுமுறையை பட்ஜெட்டிலும் தெளிவாக பார்க்க முடிகிறது. சிறுபான்மையினர் வளர்ச்சிக்கான பல திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு 66 விழுக்காடு அளவிற்கு வெட்டப்பட்டிருக்கின்றன. மகப்பேறு மருத்துவத் திட்டத்திற்கு ஒதுக்கீடு 40.15 கோடி ரூபாய் வெட்டப்பட்டிருக்கிறது. மொத்த பட்ஜெட் செலவினத்தில் பாலின சமத்துவ பட்ஜெட் ஒதுக்கீடு என்பது வெறும் 9 விழுக்காடேயாகும். இதேபோன்ற தலித்துகளுக்கு 3.5 விழுக்காடும், பழங்குடியினருக்கு 2.7 விழுக்காடு மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

2014ல் ஆட்சிக்கு வரும்போது ஆண்டு 2 கோடி பேருக்கு வேலை கிடைக்கும் என்ற பி.ஜே.பி. அரசு ஆனால், வேலைவாய்ப்பை உருவாக்குதவற்காக பட்ஜெட்டில் எவ்விதமான திட்டமும் அறிவிக்கப்படவில்லை. இவ்வாறு ஒட்டுமொத்தமாக வாங்குதில் இது ஒரு மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, தேசவிரோத பட்ஜெட்டாகும். மக்களுக்கு அமிர்தத்தை அளிக்கிறோம் என்று கூறி உண்மையில் நஞ்சை அளித்திடும் பட்ஜெட் என்று பல்வேறு பத்திரிகைகள் சுட்டிகாட்டியுள்ளது.

எனவே இவ்வாறு ஊழியர் மற்றும் தொழிலாளர் வர்கத்ததிற்கு எதிராக உழைக்கும் மக்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கெதிராக நாடு தழுவிய அளவில் கிளர்ச்சி போராட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்திட விரும்பும் அனைத்துத் தரப்பினரும் நடத்தும் போராட்டங்களில் நாமும் பங்கெடுத்துக்கொள்வோம். ●




# அறைகூவல் தீர்மானம்

மத்திய/மாநில அரசுகளின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பேராமைப்பான, அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் மற்றும் மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம் இணைந்து கடந்த 08.12.2022 அன்று புதுதில்லியில் கூடிய தேசிய மாநாட்டில் ஒன்றுகூடி, போராடி பெற்ற உரிமைகளை காக்க ஒன்றுபட்ட போராட்டத்தை வலுப்படுத்த தீர்மானித்தோம்.

மத்திய/மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகள் 1990 முதல் கட்டவிழ்த்து விடப்பட்ட புதிய தாராளமய பொருளாதார சீர்திருத்தங்கள் நமது நாட்டில் பொதுத்துறைக்கு குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்ட பொருளாதாரத்தின் அடிப்படையிலான வளர்ச்சியை தீவிரமாக நிராகரித்துள்ளது. முந்தைய UPA அரசாங்கத்தைப் போலவே, NDA அரசாங்கமும் நிதி மூலதனத்தை திருப்திப்படுத்த அதன் புதிய தாராளமய நிகழ்ச்சி நிரலை வேகமாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. வளர்ச்சி என்ற பெயரில் பின்பற்றப்படும் தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கைகள், கிராமப்புற மக்களை கணிசமாக பாதித்துள்ளன. நாடு. தற்போதைய பொருளாதாரக் கொள்கை ஒட்டுமொத்த தேசியப் பொருளாதாரத்தையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது, இது உழைக்கும் மக்களை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. நாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் விரிவடைந்துள்ளன, ஏனெனில் ஒரு சில பெரிய பெருநிறுவனங்களும் வணிக நிறுவனங்களும் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் செல்வத்தின் விரிவான பங்குகளை குறி வைத்துள்ளன.

புதிய தாராளமயக் கொள்கைகள் நாட்டின் மக்கள் சேவையை ஆழ்ந்த நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. சிவில் சர்வீஸ் என்பது சாதாரண மக்களின் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளைத் தீர்ப்பதற்கான தனித்துவமான நெறிமுறையாகும், மேலும் இது அரசாங்கத்தின் சார்பாக குறிப்பிடத்தக்க பாத்திரங்களையும் பொறுப்புகளையும் கொண்டுள்ளது.

சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப சிவில் சர்வீஸின் வலிமையும் செயல்பாடுகளும் மேம்படுத்தப்பட வேண்டும். ஆனால் புதிய பொருளாதாரக் கொள்கையானது அனைத்துத் துறைகளில் இருந்தும் அரசாங்கத்தை திரும்பப் பெற வேண்டும் என்று ஆணையிடுகிறது. இதனால் சிவில் சர்வீஸ் குறைகிறது. அவுட்சோர்சிங், ஒப்பந்தம் மற்றும் தனியார்மயமாக்கல் அதிகரித்து வருகிறது. லட்சக்கணக்கான பணியிடங்கள் காலியாக இருப்பதால், தற்போதுள்ள ஊழியர்களுக்கு தாங்க முடியாத பணிச்சுமை ஏற்படுகிறது.

புதிய தாராளமயக் கொள்கைகளை செயல்படுத்துவதன் ஒரு பகுதியாக, NDA அரசாங்கம் ஜனவரி 1, 2004 முதல் புதிய ஓய்வூதிய முறையை மத்திய அரசு சேவையில் அறிமுகப்படுத்தியது. அரசு ஊழியர்களுக்கான வரையறுக்கப்பட்ட பென்ஷன் முறையானது நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் அனைத்து சிறந்த சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். பயனாளிகளிடமிருந்து எந்த பணப் பங்களிப்பும் இல்லாமல் வரையறுக்கப்பட்ட ஓய்வூதிய முறையானது, அடக்கப்பட்ட ஊதியங்கள் வடிவில் பயனாளிகளிடமிருந்து பங்களிப்பிற்கான உள்ளமைக்கப்பட்ட அமைப்பைக் கொண்டிருந்தது. தனியார்மயமாக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் இப்போது புதிய தாராளமய உலக மயமாக்கலின் மிக முக்கியமான பொருளாதாரத் தாக்குதலாகும்.

இது உலகம் முழுவதும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களை மூழ்கடித்துள்ளது. IMF-உலக வங்கியின் ஓய்வூதிய சீர்திருத்தக் கொள்கையைப் பின்பற்றி, இந்திய அரசு "புதிய ஓய்வூதியத்திட்டம்" என்று அழைக்கப்படுவதை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய தாராளமய பொருளாதார அமைப்பு தீவிரமடைந்ததை அடுத்து, IMF மற்றும் உலக வங்கி ஆகியவை தனியார்மயமாக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டங்களை தீவிரமாக எடுத்துக் கொண்டன. சந்தைப் பொருளாதாரத்துடன் ஓய்வூதிய நிதிகளின் மொத்த இணைப்பை அவர்கள் பரிந்துரைத்தனர். அரசாங்கத்தின் கட்டுப்பாடு அல்லது தலையீடு இல்லாமல், பங்குச் சந்தையில் இருந்து லாபம் மற்றும் நஷ்டத்தை சார்ந்து இருக்க வேண்டும் என்று அவர்கள் திட்டத்தை வற்புறுத்தினார்கள். பின்னர் UPA அரசாங்கம் அதை தேசிய ஓய்வூதியத் திட்டம் என மறுபெயரிட்டது, மேலும் NDA ஆதரவுடன் பாராளுமன்றத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டது.

சமீபத்தில் ராஜஸ்தான், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் பஞ்சாப் மாநில அரசுகள் பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவுகளையும் அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளன. ஆனால் PFRDA சட்டம் தலைக்குமேல் தொங்கும் கத்தியாக உள்ளது. பேரழிவு தரும் புதிய ஓய்வூதிய திட்டத்திற்கு எதிராகப் போராடுவது மத்திய / மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கடமையாகும். உறுதியான மற்றும் தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம், PFRDA சட்டத்தை ரத்து செய்ய மற்றும் அனைத்து சந்தாதாரர்களையும் வரையறுக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்க மத்திய - மாநில அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்க முடியும்.

மத்திய அரசுப் பணியில் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளன. பல மாநிலங்களில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் ஏறக்குறைய பாதி ஒப்பந்தம் / அவுட்சோர்சிங் / தினக்கூலி ஊழியர்களால் நிரப்பப்பட்டுள்ளன. கடைநிலை பதவிகள் முற்றிலுமாக மறைந்து, உயர் பதவிகளுக்கு கூட ஒப்பந்த நியமனங்கள் செய்யப்படுகின்றன. ஆட்சேர்ப்பு கொள்கையில் மத்திய அரசு மற்றும் பெரும்பாலான மாநில அரசுகளின் பொதுவான அணுகுமுறை ஒன்றுதான். அரசு அமைப்பை முடிந்தவரை சுருக்கவும் முயற்சிக்கின்றனர். இதுவே புதிய தாராளமய சீர்திருத்தங்களின் பொதுவான அணுகுமுறை மற்றும் கட்டமைப்பாகும். தொற்றுநோய் காலத்தில், நமது நாடு பொது சுகாதாரம் மற்றும் கல்வி முறைகளின் பற்றாக்குறையை கடுமையாகக் கண்டது.

பொதுத்துறை பொதுச் சொத்தை விற்பதும் குத்தகைக்கு விடுவதும் அத்தகைய கொள்கையின் தீவிர வடிவமாகும். தனியார் மயமாக்கப்படும்போது, போராடிப்பெற்ற

அனைத்து தொழிலாளர் உரிமைகளும் காலவதியாகிவிடுகின்றன.

இந்தியப் பொருளாதாரம் கடும் நெருக்கடியில் உள்ளது என்பது உண்மை. ஆனால் மத்திய அரசு அந்த நெருக்கடியை மேலும் ஆழப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்போது தேவைப்படுவது பொது முதலீடுகளை கணிசமாக அதிகரிப்பது மற்றும் வேலைகளை உருவாக்குவது மற்றும் மக்களின் வாங்கும் சக்தியை மேம்படுத்துவதும் அதே வேளையில் நமக்கு மிகவும் தேவையான உள்கட்டமைப்பையும் உருவாக்குவது அவசியம். ஆனால் அரசாங்கம் எதிர் திசையில் நகர்ந்து, ஒருபுறம் தேசிய சொத்துக்களை விற்று, கொள்ளையடித்த பணத்தை தனியார் கார்ப்பரேட்டுகளின் நலனுக்காகவும், ஊக இலாபத்திற்காகவும் பயன்படுத்தி வருகிறது.

நம் நாட்டில் பொதுத்துறை என்பது ஒரு தன்னிறைவான பொருளாதாரத்தை அடையவும், நாட்டின் தொழில்துறை அடித்தளத்தை உருவாக்கவும் ஒரு கருவியாக இருந்தது. சமச்சீர் பிராந்திய வளர்ச்சியை வளர்ப்பதில் இது முக்கிய பங்கு வகித்தது. பொதுத்துறையை சிதைப்பது என்பது நமது தேசிய பொருளாதார நலன்கள், நிதி சுதந்திரம் மற்றும் இறையாண்மையை சர்வதேச நிதி மூலதனத்தின் நலன்களுக்கு, ஏகாதிபத்திய நலன்களுக்கு அடிபணிய வைப்பதாகும்.

பொதுத்துறையும் அதன் பெரும் சொத்துக்களும் தேசத்தின் செல்வம். யுத்திமய விற்பனை மற்றும் தனியார்மயமாக்கல் என்பது மக்களுக்கு சொந்தமான இந்த செல்வத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள தனியார் கார்ப்பரேட்களிடம் ஒப்படைப்பதாகும். இது நமது தேசிய பொருளாதாரம், சுயசார்பு மற்றும் நாட்டின் உற்பத்தித் திறன் ஆகியவற்றின் அடிப்படைக் கட்டமைப்பைத் தகர்க்கிறது, இது ஒட்டுமொத்த சமூகத்தின் மீதான தாக்குதலாகும். எனவே, நாட்டின் பொதுத்துறைகள் மற்றும் அரசுத்துறைகளை தனியார்மயமாக்குவதைத்

தவிர்க்கவும், ஆபத்தான தேசிய பணமாக்கல் திட்டத்தை கைவிடவும் மத்திய அரசை இந்த தேசிய மாநாடு கோருகிறது. மத்திய/மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், இந்தக் கொடுமையான கொள்கைகளுக்கு எதிரான போராட்டங்களில் முழுமையாக ஈடுபட தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது.

வாழ்க்கைச் செலவு அபாயகரமாக அதிகரித்து வருகிறது.அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு மத்திய அரசு 8வது ஊதியக் குழுவை நியமிக்க வேண்டும்.மாநிலங்களில் ஊதியத்தில் சமநிலை இல்லை. சில மாநிலங்களில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை என காலமுறை ஊதிய திருத்தம் நடைமுறையில் உள்ளது. நிதித் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களைப் போலவே, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை காலமுறை ஊதியத் திருத்தத்தை மத்திய அரசும் பின்பற்ற வேண்டும். மத்திய-மாநில உறவுகள் மறுவடிவமைப்பு செய்யப்பட வேண்டும், மேலும் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அவற்றின் ஊழியர்களின் ஊதிய திருத்தத்திற்கு போதுமான நிதியை ஒதுக்க வேண்டும்.

மத்திய அரசும், பெரும்பான்மையான மாநில அரசுகளும் தங்கள் ஊழியர்களுக்கு அகவிலைப்படி நிலுவைத் தொகையை தாமதமாகத்தான் ஒதுக்குகின்றன, இது அரசு ஊழியர்களைப் போன்ற நிலையான வருமானம் பெறுபவர்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிய நெருக்கடியில் தள்ளுகிறது. அன்றாடப் பொருட்களின் விலை உயர்வும், வாழ்க்கைச் செலவும் தொடர்ந்து அதிகரித்து வருவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. சரியான நேரத்தில் வெளியிடப்பட்ட டிஏ, விலைவாசி உயர்வு மற்றும் உயரும் செலவுகளை எதிர்கொண்டு குறைந்தபட்சம் சிறிதளவு சேமிக்க உதவுகிறது. பெரும்பாலான மாநிலங்களில் சரியான நேரத்தில் சம்பளச் சீர்திருத்தங்கள் நடப்பதில்லை. இது அரசாங்கங்கள் தங்கள் ஊழியர்களின் மீது எவ்விதமான அக்கறை கொண்டுள்ளன என்ற அணுகுமுறையை சரியாக வெளிப்படுத்துகிறது. மறுபுறம், பணக்காரர்களுக்கும் ஏகபோகங்களுக்கும் தொடர்ந்து கணிசமான வரிச்சலுகைகளும் தள்ளுபடிகளும் வழங்கப்படுகின்றன.

புதிய தாராளமய காலத்தில், ஒரு அமைப்பு எல்லாவற்றையும் விட முக்கியமானது. இந்த அமைப்பு ஆளும் வர்க்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தை பாதுகாக்க போராடும் நிறுவனமாகும். தற்போதைய உரிமைகளைப் பாதுகாக்கவும், நமது மனசாட்சியை புதிய உயரத்திற்கு இட்டுச் செல்லவும், திடமான மற்றும் போர்க்குணமிக்க தொழிலாளர் வர்க்க அமைப்புகள் தேவை. இருப்பினும், உலகின் சுரண்டல் வர்க்கம், தொழிலாளர்களுக்கு பேரம் பேசும் நிறுவனங்களையும் அவற்றின் திறனையும் ஊக்கப்படுத்தவும், சிதைக்கவும் முயற்சி செய்து வருகிறது. அமைப்புகளை சிதைக்க, அவர்களும் கூட்டு அரசாங்கங்களும் தொழிலாளர் வர்க்கத்தை சிதறடிக்க மதம், சாதி மற்றும் அடையாளங்களையும் பயன்படுத்துகின்றன. தற்போதைய இந்திய நிலையில், அவர்கள் தங்கள் மக்கள் விரோத மற்றும் தொழிலாளர் விரோதக் கொள்கைகளைப் பாதுகாக்க தொழிலாளர் வர்க்கத்தை பிளவுப்படுத்த இந்த நிகழ்ச்சி நிரலை மிகவும் சாதுர்யமாகப் பயன்படுத்துகின்றனர்.

எனவே, நாடு முழுவதும் உள்ள மத்திய/ மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பின்வரும் கோரிக்கைகளுக்காக ஒன்றுபட்டு போராடவும், புதிய தாராளமய, தனியார்மய வகுப்புவாத மற்றும் எதேச்சதிகார கொள்கைகளை அனைத்து மூலைகளிலிருந்தும் தோற்கடிக்கவும் அயராது பாடுபடவும் இந்த மாநாடு அழைப்பு விடுக்கிறது.

**08 டிசம்பர் 2022, டல்கோடோரா ஸ்டேடியம், புதுதில்லியில் நடைபெற்ற அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் மற்றும் மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம் இணைந்து நடத்திய தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட கோரிக்கைகள்**

1. புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வருதல் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையத்தை (PFRDA) கலைத்து, தேசிய ஓய்வூதியத்தின் கீழ் உள்ள அனைத்து சந்தாதாரர்களையும் வரையறுக்கப்பட்ட பயனளிப்பு ஓய்வூதிய முறையின் கீழ் கொண்டு வர வேண்டும்.

2. சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், ஊர்ப்புற நூலகர்கள், எம்.ஆர்.பி. செவிலியர்கள் உள்ளிட்ட இலட்சக்கணக்கான தொகுப்பூதியம் பெறும் ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

3. இராணுவ தளவாட தொழிற்சாலை, இரயில்வே, ஆயுள் காப்பீடு, வங்கி, தொலைத்தொடர்பு, துறைமுக, விமானம் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதைக் கைவிட வேண்டும். தேசிய பணமாக்கல் திட்டத்தை கைவிட வேண்டும்.

4. 8வது மத்திய ஊதியக்குழு உடனடியாக அமைக்க வேண்டும்.

5. அகவிலைப்படி, சரண்விடுப்பு, வருங்கால வைப்பு நிதி வட்டி குறைப்பு உள்ளிட்ட கொரோனா தொற்றுக் காலத்தில் பறிக்கப்பட்ட சலுகைகளை உடனே வழங்க வேண்டும்.

6. மத்திய, மாநில அரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும்.

(அ). கருணை அடிப்படையிலான

கட்டுப்பாடுகளையும் நீக்க வேண்டும்.

நியமனங்களுக்கான அனைத்து நிபந்தனைகளையும்,

7. அரசமைப்பு சரத்துகள் 310, 311 (2ஏ)(பி)(சி) ஆகியவற்றை நீக்குக. ஊழியர்கள் ஜனநாயக தொழிற்சங்க உரிமைகளை உறுதிப்படுத்திடுக.

**தொடர் இயக்க நடவடிக்கைகள்**

நாடு முழுவதும் உள்ள ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் இந்தக் கோரிக்கைகளை எடுத்துச்செல்ல, இந்த மாநாடு அனைத்து துணை அமைப்புகளையும், துறைவாரி/ பிரிவுவாரி ஊழியர்கள் வரை – பின்வருவனவற்றை உள்ளடக்கிய தீவிர மற்றும் விரிவான பிரச்சாரத்தை மேற்கொள்ள அழைப்பு விடுக்கிறது.

மாநில அளவிலான மத்திய மாநில அரசு ஊழியர்கள், பள்ளி கல்லூரி ஆசிரியர்களின் கூட்டான திட்டமிடல் கூட்டங்களை டிசம்பர் 2022க்குள் நடத்திடுவது. மேலும் கூட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும்.

2023 பட்ஜெட் கூட்டத்தொடரின் போது நாடாளுமன்றம் முன்பு தர்ணா நடத்திடுவது. கூட்டமைப்பின் சார்பில் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாடுகளை ஜனவரி 2023க்குள் நடத்திடுவது. மேற்கூறிய கோரிக்கைகள் மீது மத்திய மாநில அரசு ஊழியர் அமைப்புகள் தனித்தனியாகவும், சுயட்சியாகவும் பரப்புரை இயக்கங்களை நடத்திடுவது. மத்திய, மாநில அரசு ஊழியர் அமைப்புகள் பிப்ரவரி 2023க்குள் மாவட்ட அளவிலான போராட்ட ஆயத்தம் மற்றும் தயாரிப்பு மாநாடுகளை நடத்திடுவது. மார்ச் 2023 மற்றும் ஏப்ரல் 2023 மாதங்களில் வட்ட அளவில் மாநாடுகளை நடத்திடுவது.மே 2023 – ஜூன் 2023ல் மத்திய, மாநில அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகள் இதர அரசு துறை நிறுவனங்கள் அளவிலான ஊழியர் சந்திப்பு பிரச்சார இயக்கங்களை நடத்திடுவது. ஜூலை 2023 ஆகஸ்ட் 2023ல் மாநில அளவிலான வாகன பிரச்சாரம் (ஜீப் ஜாதா) அனைத்து மாவட்டங்களை உள்ளடக்கி நடத்திடுவது. செப்டம்பர் 2023ல் பாராளுமன்றம் நோக்கி பேரணி நடத்திடுவது.

மேற்கண்ட, கூட்டமைப்பின் அறைகூவல்படி மத்திய, மாநில அரசுகளின் கொள்கைகள் அதன் விளைவாக தினிக்கப்படும் அனைத்து பகுதி அரசு ஊழியர், ஆசிரியர் மட்டுமல்லாது இதர பகுதி உழைக்கும் வர்க்கத்திடம் கொண்டு சென்று சவால்களை சந்தித்து "இருக்கும் உரிமைகளை காத்திடவும், இழந்த உரிமைகளை மீட்டிடவும்" மேற்கண்ட இயக்க நடவடிக்கைகளை முழு வீச்சுடன் தமிழ்நாட்டில் கொண்டு சென்று வெற்றிகரமாக்கிட மத்திய, மாநில அரசு ஊழியர்கள், பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மத்திய-மாநில அரசுத் துறைகளில் செயல்பட்டுவரும் துறைவாரி/ பிரிவுவரி சங்கங்களின் ஊழியர்களை, தொழிலாளர்களை இந்த மாநாடு அறைகூவி அழைக்கின்றது. ஒன்றுபட்ட போராட்டங்கள் கொண்டு வந்து சேர்க்கும் இழந்த நம் உரிமைகஅளை, சலுகைகளை! ஒன்றிணைவோம்! வென்றெடுப்போம்!!

- கூட்டமைப்பு நிர்வாகிகள் ●

# முடிவு வாக்காளர் கையில்

- பெரணமல்லூர் சேகரன்

"அமிர்தம்"
அம்மையாரின் அறிவிப்பு
பட்ஜெட்டின் வர்ணிப்பு

அன்று முதல்
இன்று வரை
அமிர்தம் உழைப்போர்க்கானதல்ல
உழைப்பைச் சுரண்டுவோர்க்கே
ஆனது

தேன் தடவிய நஞ்சு
ஊன் உறக்கமிலா உழைப்போர்க்கு
ஏன் இத்தகைய வஞ்சம்?

வாழ்வாதார திட்டம்
நூறுநாள் வேலைத் திட்டம்
தட்டிச் சுருக்கிய நிதியால்
வெட்டி எறிந்திடும் கொட்டம்

வருமானவரி விலக்கு
திறமையான குயுக்தி நோக்கு
ஊதியக்காரர்க்கு தீர்ப்பு
தோதான ஆப்பு

புதிய ஓய்வூதியத்திட்ட முழுக்கு
கள்ள மௌன இழுக்கு

வேலைவாய்ப்பு உருவாக்கம்
பட்ஜெட் வாளால் துண்டித்த
நிறைவாகும்

சரக்கு மற்றும் சேவை வரி
இழப்பீடு ஒதுக்கா கெட்ட நெறி

வேளாண் செலவில் ஒன்றரை மடங்கு
தாளாத் துயராய்க் கானல் நீராய்
தொடரும் பலமடங்கு

தனி பட்ஜெட் ரயில்வேக்கு அந்தக்காலம்
இனி அதற்கில்லை முக்கியத்துவம்
ரயில்வே தனியார்மயக்காலம்

மதுரை எய்ம்ஸ்க்கு நிதி ஒதுக்கீடு
கைவிரிப்பு
ஒற்றைச் செங்கல்லாய்த் தொடரும்
காத்திருப்பு

தொடரும் வரிச்சலுகை
பெருநிறுவனங்களுக்கு
படரும் வரிச்சலுகையில்லை
சிறுதொழில் நிறுவனங்களுக்கு

வட்டிக்கு மேல் வட்டி கட்ட
கடனுக்கு மேல் கடன் வாங்க
உடனுக்குடன் வழி பிறந்தது
உதவாக்கரை பட்ஜெட் வந்தது

அதானி குழுமத்தின் சூது
பொதுத்துறை முதலீடு தோது
விவாதத் திறப்பு ஏது?
பட்ஜெட்டில் தீர்வு இல்லை
பெருநிறுவனச் சுரண்டலே தொல்லை

சமர்ப்பிக்கும் இறுதி பட்ஜெட்
ஆள்வோர்க்கு இனியில்லை பட்ஜெட்
முடிவு வாக்காளர் கையில்
வடிவு மாற்றம் மெய்யில்

●

பழைய ஓய்வூதியம், அகவிலைப்படி வரையறுக்கப்பட்ட ஊதியம், சரண்டர் போன்ற வாழ்வாதார உரிமைகளை மீட்டெடுக்க... அத்துக்கூலி கொத்தடிமை முறையை ஒழித்துக்கட்ட...

# மாவட்ட தலைநகரங்களில் பிப் 10 2023ல் கோரிக்கை பேரணி

## தீங்குறு பகைவரை தீக்கிரையாக்குவோம், ஆங்கொரு சேதி 'அனைத்துரிமைகளும் கிடைத்த' தென வரும் வரை!

இதை ஆணவமா, அகங்காரமா, மமதையா என்று சொல்ல முடியவில்லை. ஆனால் இவை அனைத்தையும் சேர்த்து ஒரு வார்த்தைக்குள் அடக்கி விடலாம் அது 'அதிகாரம்'. இந்த அதிகாரம் என்ற வார்த்தை சமத்துவம், சமநீதி, சமஉரிமை, வாய்மை, நேர்மை போன்றவைகளை காலில் போட்டு மிதித்து துவம்சம் செய்யும்போது அது 'சர்வாதிகாரம்' என்ற ஆணிமுனைகள் பதித்த உருட்டுக்கட்டையாக மாறிவிடுகிறது. மக்களாட்சி தத்துவத்தையே கிழித்து எரிகிறது. தாயை அவமதிக்க துடிக்கிறது . தனக்கு எதிராக யாரும் கேட்க முடியாது.. யாரும் கூக்குரலிட முடியாது. யாரும் கைதூக்க முடியாது என்பதை படிப்படியாக ஆணித்தரமாக உறுதி படுத்திக்கொண்டே வருகிறது அது.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை ஏழைகளுக்கு சில ஆயிரங்களை வீசிவிட்டு மீண்டும் மீண்டும் சர்வாதிகார நாற்காலியை பிடித்துக் கொள்வதை பிழைப்பாகக் கொண்டுள்ளது. இருவர் அவ்வப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலர் அந்த நாற்காலிக்காக போட்டி போடுகிறார்கள். சிம்மாசனங்களில் உட்காருபவர்கள் மாறுகிறார்கள் என்றாலும் அவர்களின் சித்தாந்தங்களும் சர்வாதிகாரங்களும் மாறுவதில்லை என்பதை கடந்த கால் நூற்றாண்டாக நாம் கண்டு வருகிறோம்.

மக்கள் நல அரசு என்பற்கு விளக்கமான பொழிப்புரையை ஆட்சியாளர்களுக்கு திரும்பத் திரும்பக் கூற வேண்டியுள்ளது. ஜனநாயகம் என்பதன் அர்த்தத்தை சர்வாதிகாரிகளாக மாறிவிட்டவர்களுக்கு விளக்குவது எந்த அளவுக்கு சாத்தியமோ அதே அளவுக்கு சாத்தியமானதுதான் சமதர்ம சமுதாயம், சமூகநீதி போன்ற வார்த்தைகளுக்கான விளக்கங்களும்.

இந்திய ஜனநாயகத்தில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப்பணியாளர்கள் அரசின் பொக்கிஷங்க ளாகக் கருதப்பட்ட நிலைமாறி அவர்களெல்லாம் இப்போது தலைகீழாகத் தொங்கவிடப்பட்டுள்ளனர். அரசின் திட்டங்களை செயல்படுத்துவதிலும் மக்களுக்கான சேவைகளை அரசின் திட்டங்களை கடைசி பொதுஜனம் வரை கொண்டு சேர்ப்பதிலும் அரசு ஊழியர்களின் பங்கு அன்றைய நாட்களில்

முக்கியமானதாக இருந்ததால் அவர்கள் அரசாங்கத்தின் தூதுவர்களாக மக்களால் பார்க்கப்பட்டனர். ஆனால் இன்றைய நிலையில் மக்களுக்கான திட்டங்களையும், சேவைகளையும் அரசாங்கங்கள் நிறுத்திக்கொள்ள முடிவு செய்துவிட்டதன் காரணம்தான் எந்த அரசாங்கமும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் ஆகியோரைப்பற்றி பெரிதாக கவலைப்படாததும், தனியார்மயங்களை

நோக்கிய அரசாங்கத்தின் பயணமும் இந்தநாட்டு மக்களுக்கு உணர்த்தி வரும் செய்தியாகும்.

சமதர்ம சமுதாயம், சமூகநீதி ராஜாங்கம், மக்கள் நல அரசாங்கம் என்றெல்லாம் தேர்தலுக்கு முன்பு பேசிவிட்டு வந்த ஒரு கட்சிதான் தனியார்மயத்தின் மீது தணியாத மோகம் கொண்டு அவுட்சோர்சிங் முறைக்கு அரசாணை வெளியிட்டுள்ளது. சர்வாதிகாரம் தன் உண்மை முகத்தை காட்டத் துவங்கியுள்ளதன் அடையாளம் இது. இதைநாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு கைகட்டிக்கொண்டு நிற்பது சரியாகுமா என்ற கேள்வி இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது.

அரசுத்துறைகளில் எந்த ஒரு பணியும் திட்டமிடுவதிலிருந்து செயலாக்கம் பெறுவது வரை அமைச்சுப் பணியையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள அறிவியல் ரீதியான அளவீடுகளின் அடிப்படையில் அமைச்சுப் பணிப்பிரிவின் கீழ் புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

ஓய்வு, பணித்துறப்பு, இறப்பு மற்றும் பதவி உயர்வுகளால் காலியான பணியிடங்கள் நிரப்பப்படாததாலும், அரசின் பல்வேறு துறைகளிலும் உள்ள அமைச்சுப் பணியாளர்கள், மருத்துவ மற்றும் சேவை பணியாளர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் களப்பணியாளர்கள் கடுமையான பணிப்பளுவை சுமந்துகொண்டு அல்லல்பட்டு வருவதாலும், சட்டப்படி தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை தராமல் நிறுத்திவிட்ட நிகழ்வுகளாலும் ஆட்குறைப்பு, பணியிடக்குறைப்பு. வேலைப்பளு அதிகரிப்பு போன்ற காரணங்களினாலும் அரசு ஊழியர்கள் இருக்கின்ற சில மக்கள்நலத் திட்டங்களையும் முழுமையாக நிறைவேற்றிட முடியாத நிலையில் உள்ளனர்.

ஆசிரியப் பெருமக்களுக்கும் இதே சுமை உள்ளது. பள்ளிக்கூட அறைகளில் நாளைய சமுதாயத்தை உருவாக்கக்கூடிய ஆசிரியர்களின் நிலைமைகளும் அவ்வாறே இருக்கின்றன. இந்த நிலைமைகளை மாற்ற நாம் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கிறோம். இப்போது இந்தப் போராட்டங்கள் புரட்சியாக வெடித்துக் கிளம்ப வேண்டிய காலத்திற்குள் நாம் உந்தப்பட்டிருக்கிறோம். இங்கே நாம் நடத்திய சில வீரம்செறிந்த போராட்டங்கள் நினைவுகூறத் தக்கவை.

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடிய போராட்டங்களில் பிரம்மாண்டமானது 22.6.1988ஆம் தேதியிலிருந்து 31 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம். அன்றைய தேதியில் பணியில் இருந்த அரசு ஊழியர்களோ, ஆசிரியர்களோ அவ்வளவு சீக்கிரம் மறந்து விட முடியாது. 8 லட்சம் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் பங்கேற்று வரலாறு படைத்த 31 நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தின் விளைவாக மத்திய அரசுக்கு இணையான ஊதியம், ஒருமாத ஊதியம் போனஸ் ஆகியவற்றைத் தர தமிழக அரசை ஒப்புக்கொள்ள வைத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டம்.

மறக்கமுடியாத இன்னொரு போராட்டம் 2003ல் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் மீண்டும் ஒன்றுகூடி நடத்திய காலவரையற்ற போராட்டம். அரசு ஊழியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டால் எஸ்மா, டெஸ்மா உள்ளிட்ட அனைத்துச் சட்டங்களும் பாயும் என்று சொன்ன அன்றைய முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் மிரட்டலுக்கு பயப்படாமல் அவரின் அரசை எதிர்த்து நின்று போராடிய போராட்டம். கோபமுற்ற ஜெயலலிதா ஒரே அரசாணையில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் பேரை டிஸ்மிஸ் செய்தபோதும் மனம் தளராமல் நின்று போட்ட அரசாணையை திரும்பப்பெற வைத்த போராட்டம்.

அதன்பிறகு செல்வி ஜெயலலிதாவின் அரசாங்கத்தை. மக்கள் சந்திப்பு பிரச்சாரம். வாகனப் பிரச்சாரம், மாவட்டம்தோறும் பிரச்சாரம் என பலகட்ட இயக்கங்களை நடத்தி அடுத்த தேர்தலில் அவர் தோற்றுப் போகதொண்டாற்றி 'பகை முடிக்கும் பணி முடித்த போராட்டம். 2011ல் தேர்தல் அறிக்கையில் தான் மீண்டும் ஆட்சிக்கு

வந்தால் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறப்பட்டு பழைய பென்சன் தொடர வழிவகை

காணப்படும் என்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியம். சிறப்பு காலமுறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்ததன்பேரில் அவருக்காக வாக்களித்து நாலரை வருடங்கள் காத்திருந்த அரசு ஊழியர்களின் பொறுமை கைமீறியதால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வேலை நிறுத்தம் உள்ளிட்ட காலவரையற்ற போராட்டத்தை அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பத்து நாட்கள் காலவரையற்ற போராட்டம் நடத்திய பின்பு சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் 11 அறிவிப்புகளை செல்வி ஜெயலலிதாவின் அரசு வெளியிட்டது.

செல்வி ஜெயலலிதா வெளியிட்ட அறிவிப்புகளில் முக்கிய அறிவிப்புகளான சிறப்புக் காலமுறை ஊதியம் ஒழிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பும், புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெற்று பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடருவதற்காக சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு வல்லுநர் குழு அமைக்கப்படும் என்ற அறிவிப்பும் அந்தப் போராட்டத்தை திரும்பப் பெறவைத்தது. அதன்பிறகு ஜெயலலிதா அம்மையார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்ட நிலையில் ஆட்சிப்பொறுப்பேற்ற எடப்பாடி பழனிச்சாமி அரசு ஊழியர்களை ஒரு பொருட்டாகவே மதிக்காததால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தேர்தல் களத்தையே போராட்டகளமாக மாற்றி அதிமுக அரசை வீட்டுக்கு அனுப்பிய வரலாறுதான் சென்ற தேர்தலில் நடந்தேறியது.

சென்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நம்முடைய கோரிக்கை களில் உள்ள நியாயங்களை உள்வாங்கிக் கொண்டதோடு மட்டுமல்லாமல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டக் களங்களுக்கே நேரடியாக வந்து நமக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்ததோடு நாம் நடத்திய மாநாட்டிலும் கலந்துகொண்டு ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஆட்சிக்கு வந்ததும் தீர்த்து வைப்பேன் என்று உறுதிமொழியையும் தந்தார். அவர் சொன்னபடி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்கள் குடும்பத்தினருடன் வாக்களித்ததோடு மட்டுமெல்லாமல் பிரச்சாரங்க ளும் செய்து திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக அமர முக்கியப் பங்காற்றினோம்.

ஆனால் முதல்வராகி இரண்டு ஆண்டுகள் நெருங்கும் நிலையிலும் அவர், தேர்தலிலும் அதற்கு முன்பும் கொடுத்த வாக்குறுதிபடி அரசு ஊழியர்களின் கோரிக்கைளில் ஒன்றைக்கூட செயல்படுத்தாமல் இருப்பதோடு, அவற்றை செயல்படுத்த முடியாது என்பதை தன்னுடைய அமைச்சர் மூலமாக சட்டமன்றத்தி லேயே தெரிவித்து அரசு ஊழியர்கள் அவர் மீதும் திமுக ஆட்சியின் மீதும் வைத்திருந்த நம்பிக்கையை சுக்குநூறாக்கினார்.

தற்போது அவுட்சோர்சிங் அரசாணைகளை வெளியிட்டு ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் தனியார்மய மாக்கும் முடிவை முன்னெடுத்துள்ளார். இதன்மூலம் ஆள்வது எந்தக்கட்சியாக இருந்தாலும் அவர்கள் யாரும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை கொடுப்பதற்கு மனமற்றவர்களாக உள்ளார் கள் என்பதும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப்பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் ஓட்டுக்களை பெறுவதற்காக எந்த நிலைக்கும் இறங்கி வந்து பொய்யான வாக்குறுதிகளைச் சொல்வார்கள் என்பதையும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் இப்போது உணரத் தொடங்கியுள்ளனர்.

பதவியேற்று இரண்டு ஆண்டுகள் முடியும் தருவாயில் உள்ள நிலையிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் தேர்தலுக்கு முன்பு அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட இதுவரை நிறைவேற்றவில்லை என்பது ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மட்டத்தில் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இது அரசு ஊழியர்களை ஆசிரியர்களை போராட்டக் களத்திற்கு உந்தித் தள்ளியுள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு, துறைவாரி சங்கங்கள்,

ஆசிரியர் சங்கங்கள், அனைவரும் தற்போதைய தமிழ்நாடு அரசின் மீதும், குறிப்பாக மாண்புமிகு முதல்வரின் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் உடைந்துள்ள நிலையில் இனியும் பொறுமையுடன் காத்திருப்பது என்பது கானல் நீரே! நமது வாழ்வாதார கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டம், பறிக்கப்பட்ட சரண்விடுப்பூதியம், தாமதப்படுத்தி வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வு நிறைவேற்றப்படாத சத்துணவு அங்கன்வாடி ஊழியர்களின் காலமுறை ஊதியம், ஓய்வூதியம், பணிநிரந்தரம், மற்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியத்தில் இருப்பவர்கள் காலமுறை ஊதியத்திற்கு மாற்றுதல், தனியார் முகமைகளின் மூலம் சொற்ப ஊதியத்தில்

அரசுப்பணிகளை நிறைவேற்றும் மறைமுக

தனியார்மயத்தை ஒழித்து குறைந்தபட்ச நியாயமான ஊதியங்களை உறுதிப்படுத்தும் அரசின் நேரடி நிரந்தர பணிநியமனங்கள் போன்ற நியாயமான கோரிக்கை களை நிறைவேற்றும் வரை உறுதியான மற்றும் விடாப்பிடியான இயக்கங்ணை அரசு ஊழியர்ளாகிய நாம் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு போராட்டமும் நம்முடைய இருப்பை நிலைநிறுத்துவது மட்டுமல்ல அது ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் உரிமைக்கான நெருப்பை பற்ற வைப்பது. நாம் அனைவரும் நம்முடைய விதியை மாற்றி எழுதுவதற்கான சக்தியை பெற்றிருக்கிறோம். அந்த சக்தி, பெருநெருப்பாக தீச்சுவாலையாக கொழுந்து விட்டு எரியும் போது நம்முடைய கொந்தளிப்பின் உணர்ச்சியை ஆட்சியாளர்கள் உணரத் தலைப்படுவார்கள். நாம் எவ்வளவு நெருக்கடியான காலகட்டத்திலும் அரசிற்கு உறுதுணையாக நின்றிருக்கிறோம் என்ற வரலாற்றை அவர்கள் புரிந்து கொள்வார்கள். அதை அவர்களுக்கு அஹிம்சையால் நாம் புரிய வைக்க முடியாது. ஆனால் அந்த அஹிம்சைக்கு சற்றும் குறையாத போராட்டங்களால் புரிய வைக்கமுடியும். இதுவரை அதுதான் நிகழ்ந்திருக்கிறது.

பழைய ஓய்வூதியம் செயல்படுத்தப்படாமல் உள்ள நிலை, தாமதமாக தரப்படும் அகவிலைப்படி உயர்வு, வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் சரண்டர் வழங்கப்படாமை போன்ற அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக சேலத்தில் நடைபெற்ற நமது மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் விடுக்கப்பட்ட அறைகூவல் தீர்மானத்தின் முடிவெடுத்தபடி 27.12.2022ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டமும் அதன்பிறகு 27.01.2023 வரை ஊழியர் சந்திப்பு இயக்கத்தையும் உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தையும் நடத்தி முடித்துள்ளோம்.

ஏற்கனவே நாம் திட்டமிட்டிருந்தபடி 10.02.2023ஆம் தேதி தமிழ்நாடு முழுவதிலும் மாவட்ட அளவிலான கோரிக்கை பேரணிகளை நடத்திட நாம் ஒவ்வொருவரும் தீப்பொறியாக தயாராகி வருகிறோம். நமது வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்தி நடைபெறும் இந்தப் பேரணிக்கு பின்பும் அரசு நம்மை அழைத்து கலந்து ஆலோசித்து அனைத்து நியாயமான கோரிக்கைகளையும் நிறைவேற்ற முன்வரவில்லை என்றால் 28.03.2023 அன்று இலட்சக் கணக்கான ஊழியர்கள் பங்கேற்கும் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை நடத்திட வேண்டும் என்ற திடமான தீர்மானம் கொண்டுள்ளோம். அதன்பிறகும், அரசு மனமிளகி நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வராவிட்டால் தமிழக அரசின் பட்ஜெட் கூட்டத்தொடரின்போது கோட்டையயை முற்றுகையிடுவோம். கொத்தளங்களை கதிகலங்க வைப்போம். புறந்தள்ளப்பட்டிருக்கும் நமது கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு நம்முடைய கோரிக்கைகள் முற்றாக நிறைவேற்றப்பட்டுவிட்டது என்ற சேதி வரும் வரை வீதியில் இறங்கி போராடுவோம். தோழமை ஜோதியின் கனலுக்கு வீணர்களையும், உரிமை வழங்காமல் தடுத்திருக்கும் ஈனர்களையும் தீக்கிரையாக்குவோம்.

ஆங்கொரு சேதி 'அனைத்தும் கிடைத்த''தென வரும் வரை பாங்கொடு நின்று தீங்குறு பகைவரை தீக்கிரையாக்குவோம். போர்க்களம் எங்கும் போர்ப்பரணி பாடுவோம்.

●

# பழைய பயனளிப்பு ஓய்வூதியம் சாத்தியமே!

**- இரா.மங்களபாண்டியன்**

பழைய பயனளிப்பு ஓய்வூதியம் சாத்தியமே

ராஜாஸ்தான் முதல்வர் அசோக் கெலாத் தனது நிதிநிலை அறிக்கையில் பிப்ரவரி 22, 2022 இல் அடுத்த நிதி ஆண்டிலிருந்து 2004 முதல் பணியில் சேர்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் பழைய பென்சன் அமல்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்.

அறிவித்தது காங்கிரஸ் முதல்வர். இத்திட்டத்தை சட்டமாக்கியதே காங்கிரஸ் அரசு தான். ஒரு நிர்வாக உத்தரவின் மூலம் அமல்படுத்தியது, வாஜ்பாய் தலைமையிலான பாஜக அரசு. இடதுசாரிகளைத் தவிர அனைத்துக் கட்சிகளும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் ஆதரித்தன. புதிய பென்சன் திட்டத்தை அமல்படுத்தின.

ராஜஸ்தானில் 5.6 லட்சம் பழைய பென்சன் பெறும் ஓய்வூதியர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஆகும் செலவு ரூ.23000 கோடி 5.5 லட்சம் புதிய பென்சன் ஊழியர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்காக அரசு ஆண்டு தோறும் அளிக்கும் பங்களிப்பு தொகை ரூ.29000 கோடி. இது ஆண்டுதோறும் 7.5 சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே மாநில அரசு நிதிச்சுமையை கணக்கில் கொண்டு குறுகிய கால லாப கண்ணோட்டத்தில் பழைய பென்சனை அமல் படுத்துகிறது என்று எக்ஸ்பிரஸ்சும் பிசினஸ்லைனும் குறை கூறுகின்றன. புதிய பென்சனில் நிதிச்சுமை கூடுதலாகும் என்று மேற்கு வங்க இடதுசாரி அரசில் நிதியமைச்சராக இருந்த அசிம்தாஸ் குப்தா அப்போதே கூறினார்.

ராஜஸ்தானை தொடர்ந்து மார்ச் 9 அன்று சத்திஸ்கர் முதல்வர் புதிய பென்சனில் உள்ள அனைத்து மாநில அரசு ஊழியர்களும் பழைய பென்சனுக்கு கொண்டுவரப்படுவார்கள் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்துவிட்டார். அத்துடன் அவர் ராகுல் காந்திக்கு ஒன்றிய அரசு ஊழியர்களுக்கும் புதிய பென்சனை ரத்து செய்ய கோரிக்கை வைக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். பாஜக ஆளும் மத்தியப் பிரதேசத்திலும் அசாமிலும் அந்த முதல்வர்களுக்கும் நிர்பந்தம் எழுந்துள்ளது.

பாஜக ஆளும் இமாச்சலப்பிரதேசத்தில் ராஜஸ்தான் அறிவித்த மறுநாளில் இருந்து அதாவது பிப்ரவரி 23 முதல் 9 நாள் மாநிலம் முழுவதும் பாதயாத்திரை நடத்தி மார்ச் 3 ஆம் தேதி தலைநகர் சிம்லாவில் ஒரு லட்சம் பேர் கலந்து கொண்ட மாபெரும் பேரணி நடைபெற்றது. இதை நடத்தியது புதிய பென்சன் திட்ட ஊழியர் சங்கம். இதன் விளைவாக மார்ச் 9 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்த சட்ட மன்றத்தில் உரையாற்றிய பாஜக முதல்வர் ஜெய்ராம் தாக்குர் பழைய பென்சனை அமலாக்குவத பற்றி பரிசீலிக்க தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

29 மாநிலங்களில் மேற்கு வங்கம் தவிர மற்ற 28 மாநிலங்களில் புதிய பென்சன் அமல்படுத்தப்பட்டுள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை வகித்த இடதுசாரிகள் ஆண்ட வரை மேற்கு வங்கம், கேரளா, திரிபுராவில் புதிய பென்சன் திட்டத்தை அமல்படுத்தாமல் பழைய பென்சன் திட்டத்தையே வைத்திருந்தனர். கேரளாவில் காங்கிரஸ் வந்த பின் 2013 முதலும் திரிபுராவில் பாஜக வந்தபின் 2018 முதலும் புதிய பென்சன் திட்டம் அமல்படுத்தப்பட்டது. மேற்கு வங்கத்தில் மட்டும் மம்தா பழைய பென்சனை தொடர்கிறார். அனைத்து மாநிலங்களிலும் சேர்த்து 2022 ஜனவரி 31 இல் 55,14,516 பேர் புதிய பென்சன் திட்டத்தில் உள்ளனர். தமிழக புதிய பென்சன் திட்ட ஊழியர்கள் இந்த கணக்கில் வரமாட்டார்கள். ஏனெனில் அவர்களது கணக்கு இன்னும் PFRDA வுக்கு அனுப்பப்படவில்லை.

தெலுங்கானாவில் தேர்தல் வாக்குறுதியில் புதிய பென்சனை ரத்து செய்வோம் என்று வாக்குறுதி அளித்த சந்திரசேகரராவ் அரசு, ஊழியர்களின் போராட்டத்திற்குப்பிறகும் இது மத்திய சட்டம் ஒன்றிய அரசு தான் இதனை ரத்து செய்ய வேண்டும் என்று கைகழுவிவிட்டுவிட்டார். ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி தேர்தல் வாக்குறுதி கொடுத்திருந்த போதிலும் பின்னர் ஒரு கமிட்டி போட்டு அமைதி காத்தார். உத்திரபிரதேச தேர்தலில் சமாஜ்வாதி கட்சி அதே வாக்குறுதியை அளித்துள்ளது.

பெரும்பாலான ஊழியர்கள் இந்த திட்டத்தில் வந்துள்ளதும், இந்த திட்டத்தின் அநியாயம் பற்றி விழிப்புணர்வு பெருகி உள்ளதும், எல்லா மாநிலங்களிலும் போராட்டம் வலுப்பெற்றுள்ளதும், இந்த கோரிக்கைக்கு அரசியல் ஆதரவு கிட்டியிருப்பதும் மாநில தேர்தல்களில் இந்த கோரிக்கை பிரதிபலிக்கத் துவங்கியுள்ளது. தமிழகத்தில் கூட அரசு ஊழியர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தலைமையில் வேலை நிறுத்தங்கள் உட்பட பல கட்டப் போராட்டங்கள் நடத்தியதன் விளைவாக எந்த கட்சியும் இந்த கோரிக்கையை நிராகரிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. திமுக தன் தேர்தல் அறிக்கையில் பழைய பென்சன் திட்டத்தை மீண்டும் கொண்டு வர வாக்குறுதி அளித்து. படிப்படியாக தேர்தல் வாக்குறுதிகளை அமல் படுத்துவோம் என்று முதல்வர் ஸ்டாலின் அரசு ஊழியர் சங்க மாநாட்டில் அறிவித்துள்ளார். இதுவரை அமல்படுத்தவில்லை என்பதால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் போராட்டங்களை அறிவித்துள்ளது.

சட்டத்தில் 12(4) பிரிவு கூறுவது என்னவென்றால் மாநில அரசுகள் விரும்பினால் ஒரு அறிவிக்கை மூலம் தனது ஊழியர்களை தேசிய பென்சன் திட்டத்தில் கொண்டு வரலாம். மத்திய சட்டம் நேரடியாக அவர்களுக்கு பொருந்தாது. அன்றைய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் இந்த மசோதாவை அறிமுகப்படுத்திப் பேசிய பேச்சு இன்னும் மக்களவை இணைய தனத்தில் உள்ளது.

மாநில அரசுகள் சேர கடமைப்பட்டிருக்கவில்லை. அவர்கள் தாங்களாக விரும்பி சேர்ந்துள்ளனர். ஒன்றிய அரசு ஊழியர்களுக்குத்தான் இது 1-1-2004 முதல் கட்டாயம். தெலுங்கானா அரசு ஊழியர்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டதற்கு மாநில அரசு விரும்பினால் புதிய பென்சன் திட்டத்தை திரும்பப்பெற முடியும் என்று PFR-DA பதில் அளித்துள்ளது. ஓர் அரசாணையின் மூலம் அவர்களை புதிய பென்சனிலிருந்து விலக்கிவிடலாம். 15 ஆண்டுகள் கழித்து திரும்பிப்போக முடியுமா? என்று கேட்கப்படுகிறது. போக முடியும் என்பதுதான் பதில்.

1-1-2004 முதல் பணியில் சேர்ந்த ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இது கட்டாயம். ஆனால் சில நீதிமன்ற தீர்ப்புகளுக்குப் பின் ஒன்றிய அரசு 1-1-2004 க்கு முன் தேர்வாகி 1-1-2004 அன்றோ அல்லது அதற்கு பின்போ வேலையில் சேர்ந்தவர்கள் புதிய பென்சன் திட்டத்தின் கீழ் இருந்தால் 15 ஆண்டுகள் ஆகி இருந்தாலும் அவர்களை பழைய பென்சனில் கொண்டுவர ஒன்றிய அரசு 17-2-2020இல் உத்தரவு போட வேண்டியதாகிவிட்டது. அவ்வாறு பலர் இப்போது பழைய பென்சனுக்கு மாறிவிட்டார்கள். PFRDA ஒவ்வொருவர் கணக்கிலும் ஊழியர்களது பங்களிப்பு, அரசு பங்களிப்பு என தனித்தனியாக கணக்குகளை பராமரிக்கிறது. பழைய பென்சனுக்கு மாறுகிறவர்களின் சொந்த பங்களிப்பு தொகையை அவர்களுக்கு பிஎப் கணக்கு திறந்து அதில் செலுத்திவிட்டது. அரசின் பங்களிப்பு தொகையை அரசே எடுத்துக் கொண்டது.

இதே முறையை பின்பற்றி அனைத்து ஊழியர்களையும் பழைய பென்சனில் கொண்டுவருவதற்கு எதுவும் தடை இல்லை. கொள்கைதான் தடை, ஒன்றிய, மாநில அரசு ஊழியர்களின் கணக்கில் ரூ.5.66 லட்சம் கோடி உள்ளது. இதை பங்குச் சந்தையில் போட வேண்டும். பென்சனை தனியார்மயமாக்க வேண்டும் இதுதான் சீர்திருத்தம். இதிலிருந்து பின்வாங்கக் கூடாது என்பதுதான் அவர்களின் கொள்கை.

மாநில அரசுகள் பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்தினால் ஆண்டு தோறும் அவர்கள் அளிக்கும் பங்குத்தொகை செலவு இருக்காது. செல்லும்போது செலவு என்னும் முறை தான் இருக்கும் (pay-as-you-go-system). அரசு

இதுவரை செலுத்திய பங்குத் தொகை மொத்தமாக அரசுக்கு கிடைக்கும். நிதி பற்றாக்குறை சமாளிக்கலாம்.

புதிய பென்சன் போதுமான பென்சனுமல்ல. உத்தரவாதமான பென்சனும் அல்ல. ஓர் ஊழியர், ரயில்வேயில் 14 ஆண்டுகள் பணிமுடித்து ஓய்வு பெற்றார். அவரது அடிப்படை சம்பளம் ரூ.46000. பழைய பென்சன் திட்டத்தில் 10 ஆண்டு பணி முடித்து ஓய்வு பெற்றாலே ரயில்வேயில் முழு பென்சன் உண்டு. அதாவது பாதி சம்பளம். அதாவது ரூ.23000 பென்சன் தொகை. இதில் 40 சதவீதம் அதாவது ரூ.9200 கம்யூட் செய்யலாம் அதை கழித்தால் அவரது மாத பென்சன் ரூ.13800 கம்யூட் செய்தாலும் அடிப்படை பென்சனான 23000 க்கு பஞ்சப்படி 6 மாதத்துக்கு ஒரு முறை கிடைக்கும். கம்யூட்டேசன் தொகையாக ரூ.9 லட்சம் கிடைக்கும், ஊழியர் இறந்தால் இணையருக்கோ, விதவை, மணமாகாத, விவாகரத்து பெற்ற மகள்கள் யாருக்காவது பென்சன் கிடைக்கும். பழைய பென்சனில் பிஎஃப் வேறு உண்டு அவர் சேமிப்பில் இருக்கும் தொகை வேறு அவருக்கு கிடைக்கும்.

புதிய பென்சன் திட்டத்தின்படி அவர் கணக்கில் இருந்தது. ரூ.12 லட்சம் 60 சதவீதம் அதாவது ரூ.7.2 லட்சம் அவர் எடுத்துக்கொண்டார். 4.8 லட்சம் அவர் பென்சனுக்காக ஆனுவிட்டியில் முதலீடு செய்தார். ஒரு லட்சத்துக்கு ரூ.523 வீதம் அவருக்கு கிடைப்பது வெறும் ரூ.2510 பழைய பென்சனில் அடிப்படை பென்சன் ரூ.13800 -ம் அதற்கான பஞ்சப்படியும் கிடைக்கும். எனவே இது பழைய பென்சனுக்கு ஈடு இல்லை. அத்துடன் ஆனுவிட்டி கம்பெனிகள் அந்தத்தொகை ரூ.4.8 லட்சத்தை பங்குச் சந்தையில் முதலீடு செய்கிறார்கள். அசலே பறிபோகும் அபாயம் இருப்பதாக செபி கூறுகிறது. குறைந்தபட்ச பென்சன் உத்தரவாதமும் கிடையாது ஊழியர் இறந்தால் இணையருக்கு அதே தொகை கிடைக்கும். வேறு யாருக்கும் கிடைக்காது. எனவே இது உத்தரவாதமுமில்லை. போதுமானதும் கிடையாது. இதற்கு பஞ்சப்படி கிடையாது பிஎஃப் கிடையாது. புதிய பென்சன் திட்டம் எந்த நியாயமும் இல்லாதது. எனவேதான் இன்று எந்த தொழிற்சங்கமும் இதை ஆதரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாஜகவின் சங்கமான பிஎம்எஸ் கூட புதிய பென்சனை எதிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தை கொண்டு வந்த காங்கிரசின் முதல்வரே ராஜஸ்தானில் அதன் அநியாயம் குறித்து பேசி ரத்து செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இனி இந்த திட்டம் நல்லது என்று சொல்லி யாரும் ஊழியர்களை ஏமாற்ற முடியாது. சாத்தியமில்லை என்று சொல்லியும் ஏமாற்ற முடியாது. அவர்களின் போராட்டம் இறுதி வெற்றி பெறும் வரை ஓயாது. அரசியல் நிர்பந்தம் வெற்றிக்கு வழி வகுக்கும்.

அக்கினிக்குஞ்சு ஒன்று பொந்திடை வைத்தாகிவிட்டது. வெந்து தணியும் காடு. இது காட்டுத்தீ போல பரவும்.10.02.2023 அன்று நடைபெற உள்ள பேரணியும், மார்ச் 28 தேதியில் நடைபெறும் வேலை நிறுத்தத்தில் முக்கியமானதொரு கோரிக்கை ‘புதிய பென்சனை ரத்து செய்து உத்தரவாதமான பழைய பென்சனை அமல்படுத்த வேண்டும்” என்பதாகும். இந்த வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச்செய்வோம். ஒன்றுபடுவோம், போராடுவோம், முன்னேறுவோம். ●

## “பஞ்ச்” மொரப்பா




**இன்னிக்கு எங்க வூட்டுல அடுப்பு எரியுதுண்ணா, அதுக்கு மவராசன் மோடிதான் காரணம்!**

கட்டுரை

# போற்றுதலுக்குரியவர்கள்!

## சங்க நிர்வாகி

எந்த சங்கமாக இருந்தாலும் அச்சங்க நிர்வாகிகள் பெரும்பான்மையினர் போற்றுதலுக்குரியவர்கள். தங்களின் பணியோடு பிற அரசு ஊழியர்களுக்காக நேரத்தையும் உழைப்பையும் செலவிடுபவர்கள். அதிலும் சிலர் குடும்பத்தைக்கூட கவனிக்காமல் சங்கத்துக்காக விடிய விடிய பயணங்களிலும், தபால் அனுப்புவது, கூட்டங்களுக்கு ஒருங்கிணைப்பது என கடும் பணியில் உணவைக்கூட மறந்து மூழ்கிப் போவார்கள். ஆனால் அவர்களின் அருமை, முக்கியத்துவம் தெரியாது அரசு ஊழியர்கள் அனைத்து வகையிலுமே இருக்கின்றார்கள்.

அலுவலகத்திற்கே சென்று உறுப்பினர் சந்தா கேட்போம். சங்க வித்தியாசம் இல்லாமல் புதியதாக உறுப்பினராக சேர வலியுறுத்துவோம். எதிராக வரும் கருத்துக்களையும் கூர்மையாக உள்வாங்கிக் கொள்வோம். போட்டியாளர்களைப் பற்றி விமர்சனம் செய்வோம். தனிநபர் விமர்சனம் தவிர்த்து கொள்கை அடிப்படையை பேசுவோம். வெகு சிலர் அங்கே பேயறைந்தது போல் வேண்டா வெறுப்பாக உட்கார்ந்து கேட்பது போல் பாவனை செய்வார்கள். சிலர் பணம் மொய் எழுத வந்திட்டான்கள் என்ற மனநிலையோடு இருப்பார்கள். சிலர் பார்த்ததும் எங்கோ ஒளிந்து கொள்வார்கள். மிக முக்கியமாக கடைசி நேரம் போல கோப்பிற்குள் மூழ்குவார்கள். சிலர் மதிய உணவு இடைவேளையில் சிறுடப்பா உணவை 1 மணிநேரம் கூட மெதுவாக நன்கு மென்று சுவைத்து ரசித்து உண்பார்கள். சிலர் சங்கத்துக்காரர்கள் ஏதோ தங்களின் (மிகசிறிய) பிரச்சனையை பெரிய பிரச்சனையாக கருதவில்லை என்பார்கள். மகளிரில் சிலர் தங்களின் கணவனின் மேல் பழியைப் போட்டு கேட்டுபேசி பிறகு சங்கத்தில் இணைவதாக சொல்வார்கள். இது போல சக மானிடப் பிறவிகளின் மனநிலையை, உளவியலைக் கற்று வர எனக்கு சங்கம் வாய்ப்பளித்ததை பெரிய வாய்ப்பாக கருதுகிறேன். ஆம் மற்றவர்கள் போல மாத சம்பளம் வாங்கும் நாங்கள் அலுவலகம் அலுவலகமாக தேடி பணம் பெறவேண்டிய அவசியம் என்ன? எதற்காக அவர்களிடம் சிறு தொகையான 100 ரூ மற்றும் புத்தகத்திற்கு 200ரூ பெற மணிக்கணக்கில் பேசுகிறோம்.?

எங்களுக்கு அதிலென்ன ஆதாயம்? பதில் இருக்கிறது. எப்போதும் தன்னுடைய பங்களிப்பு இல்லாமல் ஒரு நிகழ்வு நடந்தால் அதில் ஆர்வமோ, அக்கறையோ, ஈடுபாடோ, இருக்காது. இது அடிப்படை மானிட உளவியல் கருத்து. தான் கொடுக்கும் சிறு தொகை பெரிய கவனத்தை ஈர்த்திட செய்யும். அனைவரையும் ஒருங்கிணைத்து பொது எதிரிக்கு எதிராக போராட்டத்தை நடத்துவது இயற்கையின் கொள்கை. பாருங்கள் வனங்களில் காட்டெருமைகள் ஒன்றாக சேரும் போது சிங்கம் தோற்றோடும். அரசு அதிகாரம் ஊழியர் ஆசிரியர்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான ஆயுதம். மிக எளிதாக 17A அல்லது 17B போன்ற நடவடிக்கை எடுத்து முடக்கி விடலாம் தனிநபர்களை. ஊழியர் ஒற்றுமையை குலைப்பது என்பது அரசியல். ஒற்றுமையில்லாத கூட்டம் உயர் அதிகாரியின் சர்வாதிகாரத்தால் சிதறடிக்கப்படும். பல சர்வாதிகாரிகள் உருவாகிவிடுவர். இதற்காகத்தான் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 100க்கு அல்லது 200க்கு சங்கம் அல்ல. மாதம் ரூ 150 அல்லது 200 கொடுத்து நாளிதழ் வாங்குபவர் 100ரூ கொடுத்து சங்க இதழுக்கு சந்தாதாரர் ஆக வெகுவாக யோசிப்பர். மிக சாதாரணமாக உணவகங்களிலோ, பொழுது போக்கு மையங்களிலோ பல ஆயிரங்கள் செலவிடும் நம் அரசு ஊழியர் நண்பர்கள் ஆண்டு உறுப்பினர் சந்தா உறுப்பினர் ரசீது பெற்றுவிட்டு மறந்தது போல் நடிப்பதும், ஏமாற்றுவதும் மிகுந்த வலியைத் தந்துவிடுகிறது. காரணம், தனியார் மயம் என்கிற நுகர்வுக் கலாச்சாரமே!. எங்கேயாவது ஸ்பான்சர் பெற்று சங்கம் நடத்திவிடலாம். அப்படி நடத்தினால் யாருக்காக நடத்துகிறோம் என்கிற உணர்வுகள் வற்றிப்போகும். ஊழியர் ஆதரவு மற்றும் ஈடுபாடு இல்லாவிட்டால் சங்கங்கள் வருங்காலத்தில் அழிவுற நேரிடும். சங்க நிர்வாகிகள் எந்த சங்கமாக இருந்தாலும் பிச்சைக்காரர்கள் அல்ல என்பதை உணருங்கள்!! முதலில் பணத்தை கொடுங்கள். பின்னர் பேசுங்கள். உற்சாக மனநிலை என்பது பணத்தால் வராது. ஆனால் ஊழியர்கள் ஆதரவினால் வரும். முடிந்தால் ஒரே ஒரு ஆண்டுமட்டும் சங்கநிர்வாகியாக இருந்து பாருங்கள். பிறகு எப்போதும் நீங்கள் பேசிட மாட்டீர்கள். இதனை கொள்கை ரீதியாக கனிவோடு தங்கள் நேரத்தைச் செலவிடும் தோழர்கள் அனைவருக்கும் கனிவோடு சமர்ப்பிக்கிறேன்.

●

# பொது மக்களை கடைந்து எடுத்த அமிர்தம்!

**- ஜிஜி**

வருடா வருடம் ஒன்றிய அரசு தாக்கல் செய்யும் பட்ஜெட் யாருக்கு புளியைக் கரைக்கிறதோ இல்லையோ அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என அரசு சம்பளம் பெரும் அனைவர் வயிற்றிலும் புளியைக் கரைத்து அச்சத்தில் ஆழ்த்திவிடுகிறது. வருடா வருடம் நிலையான குறைப்பீடு (standard deduction) அளவை உயர்த்துவார்கள் என்று அரசு ஊழியர்கள் எதிபார்த்து எதிர்பார்த்து ஏமார்ந்ததுதான் மிச்சம். ஒன்றிய அரசின் மன நிலையை உணர்ந்து கொண்ட அரசு ஊழியர்கள் சிலர் “அய்யா எந்த சலுகையும் வேணாம் இப்போ இருக்கிறபடியே இருந்தாலே போதுமுங்க.” என்கிறார்கள். எந்த ஒன்றிய பட்ஜெட்’ அரசு ஊழியர்களுக்கு சலுகைகளை கொடுத்திருக்கிறது? இப்போது கொடுப்பதை பிடுங்கிக்கொள்ளாமல் இருந்தாலே போதும் என்ற மனநிலைக்கு பட்ஜெட்டும், வரி விதிப்புகளும் நம்மைத் தள்ளியுள்ளன. எந்த சேமிப்பு அல்லது பத்திர சலுகையும் இல்லாமல் நேரடி வரி கணக்கீட்டின் மூலம் இனி வருமானவரி காட்டலாம் என்ற அறிவிப்பின் மூலம் சேமிப்பு, ஆரோக்கியம், காப்பீடு போன்ற வரிச்சலுகையுடன் இணைந்த வருமானவரி தாக்கலை ஒன்றிய அரசு நீக்கிவிட முனைந்துள்ளது. இதன்மூலம் இரண்டு விஷயங்கள் உறுதி படுத்தப்பட்டுள்ளன. எல்ஐசி உள்ளிட்ட அரசு சார்பு நிறுவனங்கள் தனியார் கைகளுக்கு தாரை வார்க்கப்பட்டுவிடும் என்பதும், வருமான வரிக்காக அரசு ஊழியர்கள் எந்த சேமிப்பிலும், பாதுகாப்பு காப்பீடுகளிலும் முதலீடு செய்வது தடுக்கப்பட்டு நேரடி வரிவிதிப்பின் கீழ கொண்டுவரப்பாடுவார்கள் என்பதும்தான் அது. இது நமக்கு செய்யும் எச்சரிக்கை என்னவென்றால் இரண்டொரு ஆண்டுகளில் இப்போதுள்ள வருமான வரி திட்டம் நீக்கப்பட்டு புதிய அதாவது நேரடி வருமான வரி செலுத்தும் திட்டம் மட்டுமே செயல்படுத்தப்படும் நோக்கம் தெளிவாக்கப்பட்டுள்ளது. அதோடு வருமான வரி செலுத்தும் சதவீதம் உயர்த்தப்படும் அபாயமும் உள்ளது. கொஞ்சம் புரியும்படி சொல்ல வேண்டும் என்றால் இப்போது 3 லட்சம் முதல் 6 லட்சம் வரை மொததா சம்பளம் பெறுபவர்களுக்கு 5 சதவீத வரி என்பது 10 சதவீதமாகவும் 10 சதவீதமாக் உள்ளது 20 சதவீதமாகவும் மாற்றப் படலாம். ரூ.7 லட்சம் வரை மொத்த வருமானம் உள்ளவர்களுக்கு இப்போது அளிக்கப்பட்டுள்ள சலுகை குறைக்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

இந்த பட்ஜெட் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரசு சம்பளம் பெறுபவர்களை மட்டும் பாதிக்கவில்லை அனைத்துத் தரப்பினரையும் பாதித்துள்ள நிலையில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்த பட்ஜெட்டை “மக்களுக்கு அமிர்தம்” என்று வர்ணித்துள்ளார். ஆனால் சிஐ டி யு, “மக்களுக்கு அமிர்தம் அளிப்பதாகச் சொல்லி, நஞ்சை அளித்துள்ள பட்ஜெட்” என்று தெரிவித்துள்ளது. நிதியமைச்சர் தாக்கல் செய்துள்ள பட்ஜெட், வெறும் அரசியல் வாய்ப் பந்தலே தவிர வேறல்ல. இதில் நாடு எதிர்நோக்கி யுள்ள பொருளாதார நெருக்கடி குறித்து ஒரு வார்த்தை கூட இல்லை. பொருளாதார ஆய்வறிக்கையும்கூட



இதை மூடி மறைத்திருக்கிறது. பொருளாதார ஆய்வறிக்கைகூட, 2022-23இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.5 விழுக்காடு வீழ்ச்சி ஏற்படும் என்று கணித்திருக்கிறது. நாடு சுதந்திரம் அடைந்தபின்னர் தொடர்ந்து கடந்த நான்கு ஆண்டுகளாக இவ்வாறு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதுபோல் இதற்கு முன்னெப்போதும் ஏற்பட்டது கிடையாது. உற்பத்தித் துறையிலும், கடும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வேலையிழப்புகள் ஏற்பட்டிருப்பது குறித்தோ, வேலையின்மை குறித்தோ, பணவீக்கம் குறித்தோ, இவற்றால் தொழிலாளர்கள் மற்றும் சாமானிய மக்களின் வாழ்வாதாரங்கள் மற்றும் பணி நிலைமைகளில் மோசமான நிலைமைகள் குறித்தோ பட்ஜெட் கண்டு கொள்ளவே இல்லை. பொருளாதார ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சீர்கேடுகளை எப்படிச் சரி செய்வது என்று கூட பட்ஜெட்டில் எதுவும் கூறப்பட வில்லை.

**நிதி வெட்டுகள்...**

பெட்ரோலியப் பொருட்கள் மீதான மானியத்தில் கடும் வெட்டினை ஏற்படுத்தியிருப்பது, அதாவது சென்ற ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு வெட்டினை ஏற்படுத்தியிருப்பது, பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி, விலைவாசியை கடுமையாக உயர்த்துவதற்கு இட்டுச் செல்லும். கோவிட் பெருந்தொற்றின்போது நம் நாட்டின் பொது சுகாதாரத்துறை மிகவும் மோசமான நிலையில் இருந்ததிலிருந்து எவ்விதமான படிப்பினையையும் ஒன்றிய அரசாங்கம் கற்றுக்கொள்ளவில்லை என்பதையே பட்ஜெட் தெளிவாகக் காட்டுகிறது. பொது சுகாதாரத் துறைக்கு பட்ஜெட்டில் போதுமான அளவிற்கு ஒதுக்கீட்டை உயர்த்துவதற்குப் பதிலாக, 34 விழுக்காடு வெட்டினை ஏற்படுத்தி இருக்கிறது. அதேபோன்றே பள்ளி செல்லும் குழந்தைகள் இடைநிற்றல் அதிகரித்திருப்பதையோ, கல்வியில் டிஜிட்டல் பிளவு ஏற்பட்டிருப்பதையோ கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், கல்விக்கான ஒதுக்கீட்டிலும் சென்ற ஆண்டைக்காட்டிலும் 33 விழுக்காடு வெட்டினை ஏற்படுத்தி இருக்கிறது. அங்கன்வாடி ஊழியர்கள், 'ஆஷா' ஊழியர்கள், சத்துணவு ஊழியர்கள் போன்ற திட்டப் பணியாளர்களுக்கு எவ்விதமான ஊதிய உயர்வும் அளிக்கப்பட வில்லை. மகாத்மாகாந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான ஒதுக்கீடும் சென்ற ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் 33 விழுக்காடு வெட்டினை ஏற்படுத்தி இருக்கிறது. வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக கொண்டு வரப்பட்ட ஆத்மநிர்பார் பாரத் ரோஜ்கர் திட்டத்திற்கான ஒதுக்கீட்டிலும் 65 விழுக்காடு வெட்டு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

**கொடூரத் தாக்குதல்**

மிகவும் கொடூரமான தாக்குதல் என்பது தொழிலாளர் மீதானதாகும். தொழிலாளர் தொடர்பான ஒன்றிய அரசாங்கத்தின் திட்டங்களுக்கு சென்ற நிதியாண்டில் 23,165 கோடி ரூபாய் செலவினம் ஆகியிருந்த அதே சமயத்தில், இந்தப் பட்ஜெட்டில் அதில் பாதியளவாக, அதாவது 12,435 கோடி ரூபாயாக வெட்டப்பட்டிருக்கிறது. ஓய்வூதியத்திற்கான ஒதுக்கீட்டுத்தொகையும் 4.2 விழுக்காடு அளவிற்கு வெட்டப்பட்டிருக்கிறது. விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்று தம்பட்டம் அடித்த மோடி அரசாங்கம், பிரதமர் கிசான் ஒதுக்கீடுகளிலும் 11.76 விழுக்காடு வெட்டு ஏற்படுத்தியிருக்கிறது. விவசாயிகள் சம்பந்தப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு கடுமையாக வெட்டப்பட்டிருக்கிறது. வீட்டுவசதித் திட்டங்களுக்கும் பட்ஜெட்டில் கடும்வெட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்திய ஆதிவாசிகள் உரிமைகளுக்கான அமைப்பு (ஆதிவாசி அதிகார் ராஷ்ட்ரிய மஞ்ச்) இந்த பட்ஜெட்டை, "பழங்குடியின மக்களுக்கு ஆசை வார்த்தைகளைக் கூறி அவர்களைச் சூறையாடியுள்ள பட்ஜெட்" என்று தெரிவித்துள்ளது. பழங்குடியினரின் மக்கள்தொகையான 8.6 விழுக்காட்டிற்கு ஏற்ப, பழங்குடியினர் சிறப்புத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லை. மாறாக வெறும் 2.7 விழுக்காடு அளவிற்கே இருக்கிறது. இதில் மேலும் கொடுமையான அம்சம் என்னவென்றால் இவ்வாறு பழங்குடியினருக்காக ஒதுக்கப்படுவதாக அரசுத்தரப்பில்

கூறப்பட்டாலும், இந்தத்தொகை பொதுத்திட்டங்களுக்கே திருப்பி விடப்படுகிறது.

இதேபோன்றே உணவு மானியத் தொகைகளை 31 விழுக்காடு அளவிற்கு வெட்டப்பட்டிருக்கிறது. ஊட்டச்சத்தின்றி வறிய நிலையில் வாழும் பிரிவினரில் பழங்குடியினர் கணிசமானவர்கள் என்பது அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. இந்நிலையில் இவ்வாறு வெட்டினை ஏற்படுத்தியிருப்பது அவர்களைக் கடுமையாகப் பாதிக்கும். இவ்வாறு பட்ஜெட்டில் பழங்குடியினருக்கான ஒதுக்கீடு போதுமான தல்ல என்பதுடன் அவ்வாறு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகைகளும் இதர திட்டங்களுக்குத் துஷ்பிரயோகம் செய்யப்படும் என்பதை அறியும்போது இது பழங்குடியினர் மீதான மோசடி என்றே கூற வேண்டியிருக்கிறது.

ஒருபக்கம் இவ்வாறு பழங்குடியினர் ஏமாற்றப்பட்டுள்ள நிலையில் மறுபக்கத்தில் பணக்காரர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இந்த பட்ஜெட் மூலமாக நாட்டில் ஏற்றத்தாழ்வுகள் மேலும் அசிங்கமான முறையில் விரிவுபடுத்தப் பட்டிருக்கிறது. பணக்காரர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் அதே சமயத்தில் ஏழைகளின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த பட்ஜெட்டுக்கு எதிராகக் கண்டனக் கணைகள் எழுப்பு மாறு அனைத்துக் கிளைகளையும் ஆதிவாசிகள் அதிகார் ராஷ்ட்ரிய மஞ்ச் அறைகூவி அழைத்துள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே பட்ஜெட்டின் முக்கிய மான இலக்கு என ஒன்றிய நிதியமைச்சர் தனது பட்ஜெட் உரையில் குறிப்பிடுகிறார். ஆனால், பட்ஜெட்டின் நிதி ஒதுக்கீடும், திட்டங் களும் நிதியமைச்சரின் கூற்றுக்கு முற்றிலும் மாறானவை. ஒன்றிய அரசு சொல்வது ஒன்றும், செய்வது வேறொன்றுமாகத்தான் பட்ஜெட் அமைந்துள்ளது என்று சிபிஐ(எம்) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் ஜி. ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் என்பது வெறும் நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல; அது ஆளும் அரசாங்கத்தின் அரசியல் அறிக்கையே ஆகும். பட்ஜெட்டிற்கு முந்தைய நாள் சமர்ப்பிக்கப் பட்ட பொருளாதார ஆய்வறிக்கையையும் நிதிநிலை அறிக்கையையும் இணைத்துப் பார்த்தால் ஒன்றிய அரசின் நோக்கம் புரியும். ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்டு பொருளாதார வளர்ச்சியை காண முடியாது என்றும், மக்களின் வாங்கும் சக்தியை அதிகப் படுத்து வதன் மூலமே வளர்ச்சியை எட்ட முடியும் என ஆய்வறிக்கை கூறுகிறது. ஆனால், மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்தக் கூடிய அடிப்படையிலான திட்டங்கள் பட்ஜெட்டில் இல்லை.

### விவசாயிகள் – விவசாயத் தொழிலாளர்கள்

உணவுக்கு கடந்தாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.2.87 லட்சம் கோடி. ஆனால் நடப்பாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது ரூ.1.97 லட்சம் கோடி. உர மானியத்திற்கு கடந்தாண்டு ஒதுக்கீடு ரூ.2.25 லட்சம் கோடி. நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ரூ.1.75 லட்சம் கோடி. விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக உயர்த்துவதாக கடந்த தேர்தலின்போது ஒன்றிய அரசு அறிவித்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் வேளாண் வளர்ச்சியில் தேக்கம் நீடித்து வருகிற பின்னணியிலும் ஒன்றிய அரசு தனது வாக்குறுதியை நிறைவேற்றாதது மட்டு மல்ல, வேளாண் வளர்ச்சியைக் காணவும், விவசாயிகள் நலன்களை பாதுகாக்கவும் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பதிலாக ஒதுக்கீட்டை குறைத்திருப்பது வேளாண் வளர்ச்சியையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் கடுமையாக பாதிக்கும்.

### பிரதம மந்திரி விவசாயிகள் நிதி

இத்திட்டம் அறிவிக்கப்படுகிறபோது 14 கோடி விவசாயிகள் பயன்பெறுவார்கள் என ஒன்றிய அரசு கூறியது. துவக்க ஆண்டில் 11.84 கோடி விவசாயிகளுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த 3 ஆண்டு களில் இத்திட்டத்தால் பலன் பெறுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து கடந்த ஆண்டு 3.87 கோடி விவசாயிகளுக்கு மட்டுமே இத்திட்டத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**மகாத்மா காந்தி கிராமப்புற வேலை உறுதித் திட்டம்**

2020-21 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1,11,500 கோடி. கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப் பட்டது ரூ.89,000 கோடி. நடப்பாண்டின் ஒதுக்கீடு ரூ.60,000 கோடி. இத்திட்டத்தை மெல்ல மெல்ல ஒழித்திடும் நோக்கத்தோடு தான் ஒன்றிய அரசு ஒதுக்கீட்டை குறைத்து வருகிறது.

**சுகாதாரம்**

நோய்த் தடுப்பு, நோய் சிகிச்சை உள்ளிட்ட சுகாதாரத்துறைக்கு குறைந்தபட்சம் ஜிடிபியில் 3 சதவிகிதமாவது நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பது நீண்டநாள் கோரிக்கை. ஆனால், ஆண்டுக்காண்டு நிதி ஒதுக்கீடு குறைந்து வருகிறது. இப்போதும் நோய் சிகிச்சைக்கு ஆகும் மொத்த செலவில் மக்கள் செலவிடும் தொகை 67 சதவிகிதம். அரசு செலவிடுவது 33 சதவிகிதம். இந்நிலையில் கடந்தாண்டு ஒதுக்கப்பட்ட நிதி 2.20 சதவிகிதம், இவ்வாண்டு 1.98 சதவிகிதமாக குறைத்துள்ளது. 2018 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் தமிழ்நாட்டில் மதுரை மாநகரம் உள்ளிட்ட பல மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனைகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதர சில மாநிலங்களில் இத்தகைய மருத்துவமனைகள் நிறுவப்பட்டுள்ளன. இருப்பினும் மதுரை மாநகரில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யாமல் தமிழ்நாட்டு மக்களுக்கு பாஜக அரசு துரோகம் செய்துள்ளது.

**கல்வி**

ஒன்றிய அரசு கல்விக்கு ஜிடிபியில் 6 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென பல ஆண்டு காலமாக வலியுறுத்தி வருகிறது. இருப்பினும் கடந்த இரண்டு ஆண்டுகளை விட இவ்வாண்டு கல்விக்கு ஒதுக்கிய தொகை என்பது நடப்பு பட்ஜெட்டில் 2.51 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வியையும், உயர்கல்வியையும் தனியார்மயமாக்கக் கூடிய நோக்கத்திலேயே படிப்படியாக கல்விக்காக ஒதுக்கக் கூடிய தொகையை ஒன்றிய அரசு குறைத்து வருகிறது.

**தொழில் வளர்ச்சி**

தேசம் முழுவதும் சுமார் 70 சதவிகிதம் உழைப்பாளிகளுக்கு சிறுகுறு தொழில்கள் வேலை வாய்ப்பை அளிக்கின்றன. மொத்த தொழில் உற்பத்தியில் 50 சதவிகிதம் சிறுகுறு தொழில்களிலிருந்து உருவாகிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் அதானி-அம்பானி உள்ளிட்ட கார்ப்பரேட் கம்பெனிகள் வங்கி களுக்கு திருப்பி செலுத்தாத கடன் சுமார் 10 லட்சம் கோடியை ரத்து செய்தது. ஆனால், ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட திட்டங் களை உருவாக்கி சிறுகுறு தொழில்களை பாது காத்திட நடவடிக்கை எடுக்க மறுத்து வருகிறது. சிறுகுறு தொழில்களுக்கான கச்சாப் பொருள் விலை குறைப்பு, ஜி.எஸ்.டி வரி குறைப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி பல கோடி சிறுகுறு நிறுவனங்கள் வேலை நிறுத்தம் செய்தன. இப்போராட்டத்தில் நிறுவன உரிமையாளர்கள் மட்டுமல்ல, நிறுவனங்களில் பணிபுரியும் பல கோடி தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். ஆனால், நடப்பு பட்ஜெட்டில் கச்சாப் பொருள் விலை குறித்தும், ஜி.எஸ்.டி வரி குறைப்பு பற்றியும் எந்த ஆலோசனையும் இல்லை. மேலும், வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போல் சிறுகுறு தொழில்கள் செய்வோர் வாங்கும் கடனுக்கு 6 சதவிகிதமாக இருந்த வட்டியை 10 சத விகிதமாக பட்ஜெட்டில் உயர்த்தியுள்ளது ஒன்றிய அரசு.

**சமூக நலத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு வெட்டு**

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சமூக நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.5.2 லட்சம் கோடி. நடப்பு நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.3.7 லட்சம் கோடி. ரூ.1.5 லட்சம் கோடி குறைக்கப்பட்டுள்ளது. கொரோனா காலத்தில் வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு இலவச அரிசி வழங்க வேண்டுமென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்டு ஜனநாயக இயக்கங்கள் வலி யுறுத்திய அடிப்படையில் 5 கிலோ அரிசி, 5 கிலோ கோதுமை இலவசமாக வழங்கப் பட்டது. இத்திட்டத்தோடு மானிய விலையில் (அரிசி கிலோ ரூ. 3/-, கோதுமை கிலோ ரூ.2/-) வழங்கப்படும் திட்டமும் அமலில் இருந்தது. தற்போது மானிய விலையில் அரிசி, கோதுமை

விற்பனை செய்யும் திட்டத்தை ஒன்றிய அரசு ரத்து செய்துவிட்டது. இதன் மூலம் உணவுப் பாதுகாப்பிற்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையையும் நடப்பு பட்ஜெட்டில் அரசு குறைத்துவிட்டது. இலவச அரிசி போதுமானதாக இல்லாத குடும்பங்கள் வெளிச்சந்தையில் கிலோ ரூ.40, 50 என்று வாங்க வேண்டியுள்ளது.

பொருளாதார வளர்ச்சியைப் பற்றி ஆய்வு செய்த ஆக்ஸ்பாம் நிறுவனம், இந்தியாவில் மேல்தட்டில் இருக்கக் கூடிய ஒரு சதவிகித கார்ப்பரேட் கம்பெனிகள் உள்ளிட்ட பெரும் பணக்காரர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் உருவான செல்வத்தில் 45.5 சதவிகிதத்தை கைப்பற்றியிருக்கிறார்கள். அதேவேளை, அடித்தட்டில் உள்ள 50சதவீதம் மக்கள், மேல்தட்டில் உள்ள 10சதவீதம் பணக்காரர்கள் செலுத்தும் வரியை விட 6 மடங்கு கூடுதலாக செலுத்துகிறார்கள். இந்தியாவில் பொருளாதார ஏற்றத்தாழ்வு மேலும்மேலும் அதிகரித்து வருவதையே இந்த விபரம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. ஏற்றத்தாழ்வு மேலும் மேலும் அதிகரித்து வருவது பொருளாதார வளர்ச்சியை கடுமையாக பாதிக்கும். வளர்ச்சி பாதிக்கப்படுகிறபோது மக்களின் வாழ்க்கைத் தரமும் பாதிப்புக்குள்ளாகும். மக்கள் நலனை மறுத்து கார்ப்பரேட் நலன்களை பாதுகாக்கக் கூடிய அடிப்படை யில் தான் மோடி அரசின் நடப்பாண்டு பட்ஜெட்டும் அமைந்துள்ளது. நவீன தாராளமய பொருளாதார கொள்கையின் அடிப்படையிலேயே இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. நடப்பாண்டு நிதி நிலை அறிக்கை, மக்கள் மீது தொடுக்கப்பட்ட ஒரு தாக்குதலே ஆகும். மக்கள் நலனுக்காக மக்களை திரட்டிப் போராடுவது நமக்கு முன்னால் முக்கியமான கடமையாகும்.

**ஒன்றிய அரசின் மாணவர் விரோத பட்ஜெட்**

ஒன்றிய பட்ஜெட் மாணவர்களின் சமீபத்திய எந்த கோரிக்கையையும் செவிமடுக்கவில்லை. பொதுக் கல்விக்கான எந்த நம்பகத்தன்மையும் அளிக்கவில்லை. நிதி அமைச்சரின் முழு பட்ஜெட் உரையில் எங்குமே "பொதுக் கல்வி - Public Education" எனக் குறிப்பிடவில்லை. கல்வித்துறையில் அரசு எந்தவித பங்களிப்பும் செலுத்த வேண்டியதில்லை என்பதை இந்த பட்ஜெட் உணர்த்துவதாக உள்ளது.

ஒன்றிய பாஜக அரசு இக்காலத்தில் பல்வேறு கல்வி உதவித் தொகைகளை நிறுத்தியுள்ளது மட்டுமின்றி, உதவித்தொகை பெறுபவர்களின் எண்ணிக்கையையும் திட்டமிட்டு குறைத்துள்ளது. இச்சூழலில் புதிய கல்வி உதவித் தொகை திட்டம் ஏதும் அறிவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பும் பொய்த்துள்ளது. நடைமுறை யில் உள்ள கல்வி உதவித்தொகை திட்டத்திற்கே போதிய நிதியை ஒதுக்காமல் குறைத்துள்ளது.

பட்டியல் சமூக மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை 2021-22ல் ரூ.3412.65 கோடி ஒதுக்கியதில், அந்த ஆண்டு ரூ.1978.56 கோடி மட்டுமே செலவு செய்துள்ளது. அதாவது 60 சதவீதத்திற்கும் குறைவாகவே அந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியில் செலவு செய்தது. கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பல்வேறு கல்வி உதவித் தொகைக்கும், ஜம்மு -காஷ்மீர் மாணவர்களுக்கான சிறப்பு உதவி தொகைக்கும் இவ்வாண்டு எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை. மிகவும் வாய்சவடால் அடிக்கப்பட்ட 'பிரதம மந்திரி மாணவிகள் விடுதி திட்டத்திற்கு இவ்வாண்டு ரூ.10 கோடியை குறைத்துள்ளது. மறுபுறம், 'இந்திய அறிவு திட்டத்திற்கு (Indian knowledge system)' ரூ.10 கோடியை ஒதுக்கி இரட்டிப்பாக்கி உள்ளது. உண்மையில் ஒன்றிய அரசின் தேசிய கல்வி திட்டம் எதை ஊக்குவிக்கப் போகிறது என்பதை இது காட்டுகிறது. உலகத்தர கல்விநிறுவனம் இந்தியாவில் உருவாக்கப் போவதாக ஜம்பம் அடித்த திட்டத்திற்கே 2022-23ஆம் ஆண்டை விட இவ்வாண்டு ரூ.500 கோடி குறைவாகவே ஒதுக்கியுள்ளது. ஒன்றிய அரசின் தேசிய கல்வித் திட்டத்திற்கு கூட (National Education Mission) இந்த பட்ஜெட்டில் ரூ.600 கோடியை குறைத்துள்ளது. மேலும் கல்வி மேம்பாட்டிற்கான ஒதுக்கீட்டில் ரூ.826 கோடியை குறைத்துள்ளது. மேலும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் நாடு முழுவதும் 92,831 பேர் என்பதிலிருந்து 79,035 பேராக குறைந்துள்ளனர். தற்போதைய பட்ஜெட்டில் மாணவர்களின் நலனை பாதுகாக்கவோ, கல்வியை மேம்படுத்தவோ எந்த வித முன்னெடுப்பும் இல்லை.

### பெண்களையும் உழைக்கும் மக்க ளையும் ஏமாற்றும் பட்ஜெட்

ஒன்றிய அரசு தாக்கல் செய்துள்ள 2023-24 பட்ஜெட், பெண்களையும் உழைக்கும் மக்க ளையும் ஏமாற்றும் பட்ஜெட்டாகும் என்று அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் சாடியுள்ளது. நாட்டில் சமத்துவமின்மை ஆழமான முறையில் அதிகரித்துள்ள நிலையில் இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

பட்ஜெட்டை உன்னிப்பாக ஆராயும்போது பல்வேறு அரசின் செலவினங்கள் வெட்டப் பட்டுள்ளதைக் காண முடிகிறது. மோடியும், நிதியமைச்சரும் பெண்கள் ஆதரவு பட்ஜெட் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதன் விவரங்களைப் பார்க்கும்போது அவை அதற்கு நேரெதிராக இருக்கின்றன. பல செலவினங்களும் பெயரளவில் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. பெண்களின் பாதுகாப்பு மற்றும் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான திட்டங்களுக்கு மிகவும் குறைந்த அளவே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெண்களின் விளையாட்டுக்கு என்று எந்த ஷரத்தும் இல்லை. சமீப காலங்களில் இவர்களின் பாதுகாப்பு என்பதும் கேள்விக்குறியாகி இருக்கிறது.

### கடன்வலையில் சிக்கிய பெண்களுக்கு உதவாத பட்ஜெட்

பட்ஜெட்டில் பெண்களின் சேமிப்பு குறித்து அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தாலும், இவற்றில் பெரும்பகுதி பெண்களை தனியார் வசம் தள்ளிவிடும் போக்கு இருப்பதைக் காண முடிகிறது. புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மஹிலா சம்மன் சேமிப்பு பத்திரா என்னும் திட்டத்தின் மூலம் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலராலேயே சேமிப்புகளைச் செய்திட முடியும். இவ்வாறு அரசாங்கத்தால் அறிவிக்கப் பட்டுள்ள திட்டங்கள் கடன் வலையில் சிக்கிக்கொண்டுள்ள பெரும்பான்மையான பெண்களுக்கு எவ்விதத்திலும் உதவாது. மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான செலவினங்கள் 33 விழுக்காடு வெட்டப்பட்டிருப்பதானது, பெண்கள் மீது நேரடியான தாக்குதலைத் தொடுத்திடும். இதேபோன்றே விதவை களுக்கான ஓய்வூதியத் திட்டத்திற்கும் தலித்துகள் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்களுக்கும் பட்ஜெட் ஒதுக்கீடு கடுமையாக வெட்டிச் சுருக்கப்பட்டிருக்கிறது. அங்கன்வாடி மற்றும் மதிய உணவுத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகளும் மிகவும் குறைவு. இன்றுள்ள பணவீக்கத்துடன் ஒப்பிடும் போது, இந்தத் தொகையின் உண்மையான மதிப்பில் பார்த்தோமானால் மிகவும் மோசமான அளவில் தொகை வெட்டப்பட்டிருக்கிறது. கல்விக்கான செலவினமும் வெட்டப் பட்டிருப்பது, பெண் கல்வி மீது கடும் பாதிப்பை ஏற்படுத்தும். அதேபோன்றே சுகாதாரத் திட்டங்களுக்கும் செலவினங்கள் பெயரளவில் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இந்த அரசாங்கம் சமூக நலத் திட்டங்களில் கடும் வெட்டினை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆக, பல தரப்பிலிருந்தும் இந்த பட்ஜெட் மீது அதிருப்தியும் கண்டனங்களும் எழுந்துள்ள நிலையில் ஒன்றிய நிதியமைச்சை நிர்மலா சீதாராமன் இதனை மக்களுக்கு அமிர்தம் என்று கீழ்கண்ட கவிதையில் உள்ளவாறு வஞ்சப் புகழ்ச்சியாக சொல்லியிருப்பாரோ?

பாற்கடலை அசுரர்கள்
வியர்வை சொட்டச்சொட்டக்
கடைந்தனர்.
தேவர்கள் காவிக்கொடி நிழலில்
'அச்சாதீன்' பாடி
கண்டு களித்திருந்தனர்.

நிர்மலமாய் சிவனார்
நொடிக்கொரு உடை அணிந்து
தலைமையேற்று
வழிகாட்டிக் கொண்டிருந்தார்.

திரண்ட அமிர்தத்தை
திரட்டி எடுத்து தேவர்கள் வாயில்
ஊட்டிவிட்டார் சிவனார்.

கக்கிய நஞ்சை வழித்துண்ணுமாறு
அசுரர்களுக்கு அருளாசி
வழங்கினார் சிவனார்.

அமிர்த காலமென
சிவனாரும் தேவர்களும்
குதூகலிக்க
கலிகாலமென அசுரர்கள்
கண்ணீர் விட்டனர்!

– சு.பொ.அகத்தியலிங்கம்

# சிங்கப் பெண்களின் சங்கம மாநாடு!

**தெ. வாசுகி**

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் 7ஆம் அகில இந்திய மாநாடு ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் 2023 ஜனவரி 28,29ல் நடிட நடைபெற்றது. அனைத்திந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக அரசு ஊழியர் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளுக்காக தொடர்ந்து போராடி வருகிறது. அதே நேரத்தில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் பெண்களின் உரிமைக்காக பாடுபடுகிறது. சமீப காலங்களில் தொடர்ந்து அதிகரித்து வரும் பெண்கள் மீதான வன்முறைகள் , ஆணாதிக்க சிந்தனை மற்றும் மதங்களின் பெயரால் பெண்களின் மீது திணிக்கப்படும் வன்முறைகளுக்கெதிராக தொடர்ந்து குரலெழுப்பி வருகிறது. பெண் ஊழியர்கள் குடும்பத்திலும், பணிபுரியும் இடங்களிலும் எதிகொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அனைத்து மாநில பிரதிநிதிகளும் பங்கேற்க கூடிய அகில இந்திய மாநாட்டில் நமது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் போர்படைத் தளபதிகளாக, கூர்தீட்டும் வாளாக, பட்டை தீட்டும் வைரங்களாக, பெண்பரிதிநிதிகளின் பங்கேற்பு அமையப்பெற்றது. சிங்கப்பெண்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் ஏற்படுத்தப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க முதல் மாநில மகளிர் துணைக்குழுவில் இடம்பெற்ற வடசென்னை மாவட்ட முன்னாள் மாநிலத் தலைவர் வீரப்பெண்மணி தோழர் ப. சுந்தரம்மாள் AISGEF கொடியசைத்து துவக்கி வைக்க நமது அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவரும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சங்கத்தின் உதவி பொதுச் செயலாளருமான தோழர் மு.அன்பரசு தலைமையில் மாநில மையத்திலிருந்து அனைவரும் சென்னை விமான நிலையம் நோக்கி பேருந்தில் புறப்பட்டனர் . மாவட்ட நிர்வாகிகள். வட்டக்கிளை தோழர்கள் என அனைவரும் விண்ணதிரும் கோஷத்துடன் வழியனுப்பி வைத்தனர்.

அகில இந்திய மாநாட்டில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் பங்கேற்ற பெண் பிரிதிநிதிகள் விவரம்.

**மாநில பெண் பிரதிநிதிகள்**

1. சி. பரமேஸ்வரி
   மாநில மகளிர் அமைப்பாளர் மற்றும் மாநிலத் துணைத்தலைவர்
2. தெ.வாசுகி
   மாநில மகளிர் இணை அமைப்பாளர் மற்றும் துணைப்பொதுச் செயலாளர்
3. கோ. பழனியம்மாள்
   மாநில மகளிர் இணை அமைப்பாளர் மற்றும் மாநிலத் துணைத்தலைவர்
4. மு. செல்வராணி
   மாநில மகளிர் துணை அமைப்பாளர் மற்றும் மாநிலத் துணைத்தலைவர்
5. உ. சுமதி
   மாநில மகளிர் துணை அமைப்பாளர் மற்றும் மாநிலச் செயலாளர்
6. ச.ஹேமலதா
   மாநில மகளிர் துணை அமைப்பாளர் மற்றும் மாநிலச் செயலாளர்

**மாவட்டவாரியாக பங்கேற்ற பெண் பிரதிநிதிகள்**

1. கே.தேவகி - தர்மபுரி
2. வி.ஹேமநந்தினிதேவி - கிருஷ்ணகிரி
3. டி. ராஜீ - மதுரை
4. எம். ராணி - சேலம்
5. பி. சத்தியவாணி - திருச்சி
6. பி.பிரவீணா - கரூர்
7. ஏ. மகேஸ்வரி - துத்துக்குடி
8. எஸ். தமிழ்சுடர் - திருவாரூர்
9. டி. கலா - மயிலாடுதுறை

10. சி. அமுதா - திருவள்ளூர்
11. ஏ. ராஜேஸ்வரி - திருப்பூர்
12. பி. புனிதா - திருவண்ணாமலை
13. ஜி. மகேஸ்வரி - நீலகிரி
14. ஜே. சரஸ்வதி - வட சென்னை
15. எஸ். மலர்விழி - தென் சென்னை
16. எம்.ஆர். திலகவதி - காஞ்சிபுரம்
17. வி.கவிதா - தஞ்சாவூர்
18. டி.ஜெயசுதா - செங்கல்பட்டு
19. பி.ராணி - நாகப்பட்டினம்

மும்பையில் நடைபெற்ற தேசிய செயற்குழுவில் பொது அறிக்கை ஆங்கிலத்தில் தயார் செய்யும் குழுவில் தோழர் தெ. வாசுகியும், தீர்மானங்களை ஆங்கில வடிவில் தயாரிக்கும் குழுவில் தோழர் சி. பரமேஸ்வரியும் அறிவிக்கப்பட்டதன்படி அறிக்கைகளும் தீர்மானங்களும் தாயரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது. மேலும் 27.01.2023 அன்று அகில இந்திய மகளிர் மாநாட்டில் மேடையில் தோழர் சி.பரமேஸ்வரியும், தோழர். கோ. பழனியம்மாளும் 28.01.2023 அன்று தோழர் தெ. வாசுகியும் இடம்பெற்றனர். விவாதத்திற்கு வழங்கப்பட்ட 18 நிமிடங்களில் மாநில நிர்வாகிகள் தோழர் மு. செல்வராணி மற்றும் ச.ஹேமலதா, மாவட்ட மகளிர் தோழர் டி.ராஜி (மதுரை) மற்றும் தோழர் ஏ. மகேஸ்வரி (துத்துக்குடி) ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். மேலும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தோழர். சி.பரமேஸ்வரி, தோழர். தெ.வாசுகி மற்றும் தோழர் கோ. பழனியம்மாள் ஆகியோர் ஆங்கிலத்தில் முன்மொழிந்தனர்.

பாலின சமத்துவத்தை பறைசாற்றவும் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான முழக்கத்துடன் நடைபெற்ற இம்மாநாட்டில் பங்கேற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வீராங்கனைகள் அரசு ஊழியர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான தோழர் எம்.ஆர். அப்பன் அவர்களின் இலட்சியக் கூற்றுப்படி நமது ஸ்தாபனத்தின் எதிர்காலத் தலைவர்களாக உருவாகிட வீரம் செறிந்த வாழ்த்துக்கள் ●

## சேலம் சிறைத் தியாகிகள் - நினைவஞ்சலி

தேசமே சுதந்திரக்காற்றை சுவாசித்துக கொண்டிருந்த காலகட்டத்தில் (1948-1951) ஒரு பகுதியினருக்கு மட்டும் சுதந்திரமில்லை. இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு வகித்த கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. அரசியல் சுதந்திரம் கிடைத்தால் மட்டும் போதாது, பொருளாதார விடுதலையும் வேண்டுமெனப் போராடிய கம்யூனிஸ்டுகளை ஓங்கவிடக் கூடாது என எண்ணிய காங்கிரஸ் அரசும் அதிகார வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்து கம்யூனிஸ்டுகளை வேட்டையாடி சிறையில் தள்ளியது. ஏராளமான பொய் வழக்குகள் போடப்பட்டன. அதன் ஒரு பகுதியாக சேலம் மத்திய சிறையில் தமிழ்நாடு,கேரளா,ஆந்திரா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ( அன்றைய மதராஸ் ராஜதானி) 350க்கும் மேற்பட்ட கம்யூனிஸ்டுகள் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களுக்கு ஆறு மாதம் முதல் இருபது ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இவர்களில் பெரும்பகுதியினர் 20 வயதுக் குட்பட்டவர்கள்.

இத்தகைய அரசியல் கைதிகளை கிரிமினல் கைதிகளோடு சேர்த்தடைத்து வஞ்சித்தது காங்கிரஸ் அரசு. கிரிமினல் கைதிகளைப் போல நம்பர் அட்டையையும் தொப்பியையும் அணிய வற்புறுத்தியது சிறை நிர்வாகம். முதல் இந்தியக் குடியரசுக் கொண்டாட்டம் முடிந்து சில நாட்களே ஆகியிருந்தன. 1950..பிப்ரவரி 7 அன்று15 தோழர்களை அனெக்ஸ் பகுதியிலிருந்து தலைமைச் சிறைக்குக் கொண்டு சென்றனர். மாட்டு நுகத்தடியில் பூட்டி நீர் இறைக்க வைத்தனர். பிப்ரவரி 11ல் நம்பர் அட்டை அணிய மறுத்ததால் தடியடி நடத்தினர். தோழர்கள் கற்கள் மூலம் தாக்கினர். அப்போது ஜெயிலர் மீது ஒரு கல் விழுந்துவிட்டது. அவ்வளவுதான். உடனே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.17 தோழர்கள் துப்பாக்கிச் சூட்டிலும் 5 தோழர்கள் அடித்தும் கொல்லப்பட்டனர்.

குருதியால் எழுதப்பட்ட பிப்ரவரி 11ல் 1.ஆறுமுகம் 2.காவேரி 3.சேக்தாகூத் 4. எம்.கே.கோபாலன் நாயர் 5.பி.கோபாலன் நாயர் 6. நீலச்சேரி 7. பரம்பிக் கடாரம் குஞ்சிப்பா 8. குஞ்சிராமன் 9. நந்தாரி குஞ்சம்பு 10. கலாத்தொக்கோயில் ஏதேன் 11.மரோலிகோரன் 12.எம். நாராயண நம்பியார் 13. புல்லாக்ஜி ஏதேன் கோவிந்தன் நம்பியார் 14. குஞ்சப்பன் நம்பியார் 15. வடகோறையின்மான் ஆசாரி 16. என். கண்ணன் 17. காட்டூர் 18. உடையாமாடத்து பலக்கல் நம்பியார் 19. தாளன் ராமன் நம்பியார் 20. எம். கோபாலக்குட்டிநாயர் 21.நடுக்காண்டி பத்மநாபன் 22 . நலப்பறக்கல் பாலன் ஆகிய போராளிகளை 105 ரவுண்டுகள் சுட்டுக்கொன்றது காங்கிரஸ் அரசு. இவர்கள் அனைவரும் ஏழை உழைப்பாளிகள்.. விடுதலை இதழில் தந்தை பெரியார் 'நினைக்க நினைக்க நெஞ்சம் வெடிக்கிறது' என்று தலைப்பிட்டும் திராவிட நாடு இதழில் அறிஞர் அண்ணா ‘கேட்டது வாழ்வு கிடைத்தது சாவு' என்று தலைப்பிட்டும் கட்டுரைகள் எழுதினர்.

**- பெரணமல்லூர் சேகரன்.**



## நீ போட்டு வைத்த பீட் ரூட்டில்

# இந்த இயக்கம் தலை நிமிர்ந்து நடக்கும்!

அங்கீகாரம் கிடைக்காத
துறையிலிருந்து
பீறிட்டெழுந்த குரல்
இடம் பெற்றுள்ளது
இன்றைய நிகழ்ச்சி நிரலில்
(31.01.2023)

சமையலறையில் தாழ்த்தப்பட்ட இடம்
பாத்திரங்கள்
கழுவும் இடம்தான்;
சத்துணவுத் துறை
ஊழியர் இனமும்
இன்று வரை
அந்த வகைதான்.

அதை மாற்றிக்காட்ட
வேண்டுமென்ற
போராட்டத்தின்
முப்பதாண்டு கால
போர்ப்படைத் தளபதி
தோழர் சுந்தரம்மாள்
என்ற பெருநதி
ஊழியர் இயக்கங்களின்
வெகுமதி.
துறை அவரை
உபயோகித்தது வெறும்
கறி வேப்பிலையாக
ஆனால் இயக்கத்தில்
அவர் இருந்ததோ
வேப்பிலைக் காரியாக.

உணவுக்காக அவர்
கம 'ரசங்'கள்
செய்ததுண்டு
உரிமைக்காக
சமரசங்கள்
எப்போதும்
செய்ததில்லை.
சொற்ப ஊதியம் என்ற
`பெருங்காயத்'தை
சமவேலைக்கு சமஊதியம் என்ற
குழம்பில் போட்டு
கரைத்துவிடத்தான்
முப்பது ஆண்டுகளாக
முட்டி மோதி போராட்டம்.

கையில் வைத்திருந்த
கரண்டி மாணவர்கள் நாவில்
சுவை கூட்டியது.
கருத்தில் கொண்டிருந்த
கியாரண்டி ஊழியர்கள்
உரிமைக்கு மெருகேற்றியது.
துறை அவரை
கறைபடிய வைத்திருந்தாலும்
ஊழியர் இயக்கம் அவரை
திரையில் வெளிச்சம் பாய்ச்சிக் காட்டியது

எல்லா மேடைகளிலும்
அவர் குரல் ஒலித்தது
எல்லா அதிகாரிகளிடமும்
அவர் வாதம் ஜொலித்தது.
சத்துணவு ஊழியர் இயக்கம்
தந்த சிங்கப் பெண்ணே…
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
கண்ட தங்கப்பெண்ணே…

நீ போட்டுவைத்த
பீட் ரூட்டிலேயே
இந்த இயக்கம் எப்போதும்
தலைநிமிர்ந்து நடக்கும்.

**வாழ்த்துகளுடன்**
**மு.அன்பரசு**
**மாநிலத் தலைவர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.**

## போராட்டங்களை திட்டமிடுவதில் திறமையானவர்

# தோழர் சுந்தரம்மாள்!

## பணி நிறைவு பாராட்டு விழாவில் தலைவர்கள் புகழாரம்!!




தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவரும், அரசு ஊழியர் சங்கத்தின் வடசென்னை முன்னாள் மாவட்டத் தலைவருமான சுந்தரம்மாள் பணி நிறைவு பாராட்டு விழா சென்னையில் செவ்வாயன்று (பிப். 1) நடைபெற்றது. கூட்டத்தில் தலைவர்கள் பேசுகையில், சுந்தரம்மாள் இனிமையாக பழகக் கூடிய களப்போராளி. போராட்டங்களை திட்டமிடுவதில் வல்லவர், ஊழியர்களை அணிதிரட்டுவதில் அவரின் பங்கு மகத்தானது. அவர் சங்கப் பணியாற்றுவதற்கு உறுதுணையாக அவரது குடும்பமே இருந்தது. 2010ஆம் ஆண்டு சத்துணவு ஊழியர்கள் கோட்டை நோக்கி முற்றுகை போராட்டம் செய்த போது, காவல் துறையினரின் அனைத்து தடுப்புகளையும் தகர்த்து துணிச்சலுடன் தலைமைச்செயலகத்திற்குள் சென்று குரல் கொடுத்தவர். சத்துணவு, அரசு ஊழியர் சங்கம், ஜாக்டோ ஜியோ நடத்திய வீரம் செறிந்த போராட்டங்களில் முத்திரை பதித்தவர். வீரப்பெண்மணி சுந்தரம்மாள் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டதில் இருந்து ஓய்வுபெறும் வரை ஏற்றுக் கொண்ட கொள்கையில் உறுதியுடன் இருந்து செயல்பட்டார்.

அவர் அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவரது சங்கப் பணியையும், சமூகப் பணியையும் தொடர வேண்டும் என தோழர்கள் கேட்டுக் கொண்டனர். மேலும் அவருக்கு உறுதுணையாக இருக்கும் அவரது மகள், மருமகன் ஆகியோரையும் வெகுவாக பாராட்டினர். இந்நிகழ்விற்கு மாவட்டத் தலைவர் வே.விஜயகுமாரன் தலைமை தாங்கினார். மாவட்ட மகளிர் அமைப்பாளர் ஜெ.சரஸ்வதி வரவேற்றார். இதில் அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு. அன்பரசு, நெ.இல.சீதரன் (அனைத்துதுறை ஓய்வூதியர் சங்கம்), அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநில பொருளாளர் ந.ஞானகுரு, சத்துணவு ஊழியர் சங்க தலைவர்கள் மலர்விழி, கே.ஆண்டாள், த.வாசுகி, ஆ.பெரியசாமி, பி.ராமமூர்த்தி, கே.பழனிச்சாமி, ச.சுந்தரமூர்த்தி, கற்பகம், கு.வெங்கடேசன் (தலைமைச்செயலகம்), சா.டானியல் ஜெயசிங், தெ.வாசுகி, உ.சுமதி, ஹேமலதா, ம.அந்தோணிசாமி, சி.கலைச்செல்வி, எஸ்.ஏ.வெற்றிராஜன், ஜெ.பட்டாபி, தியாகராஜன் (அரசு ஊழியர் சங்கம்), சி.பரமேஸ்வரி (மாநில மகளிர் அமைப்பாளர்) ஆகியோர் பேசினர். ப.சுந்தரம்மாள் ஏற்புரையாற்றினார். நிறைவாக த.ஏழுமலை நன்றி கூறினார். ●

மோசடிகள்

# மோசடிக்குள் ஒளிந்திருக்கும் ஆசாமிகள் யார்?

தாஜ்மஹால் = முஸ்லிம்களால் கட்டப்பட்டது;

செங்கோட்டை = முஸ்லிம்களால் கட்டப்பட்டது;

குதுப்மினார் = முஸ்லிம்களால் கட்டப்பட்டது;

சார் மினார் = முஸ்லிம்களால் கட்டப்பட்டது;

கோல் கும்பஸ் = முஸ்லிம்களால் கட்டப்பட்டது;

சிவப்பு கதவுகள் = முஸ்லிம்களால் செய்யப்பட்டவை;

ஏவுகணை = முஸ்லீம் செய்தது (டாக்டர் கலாம்);

இந்தியா கேட் = ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது

இந்தியாவின் நுழைவாயில் = ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது

ஹவுரா பாலம் = ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது;

பாராளுமன்ற மாளிகை = ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது;

ராஷ்டிரபதி பவன் = ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது;

வடக்கு-தெற்கு தொகுதி = ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது;

கன்னாட் பிளேஸ் = ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது..... (கட்டியவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள்.)

அரசியலமைப்பு = எஸ்சி உருவாக்கப்பட்டது (டாக்டர் அம்பேத்கர்);

அப்படியென்றால் இவர்கள் அல்லாமல் இந்தியாவில் ஒரு பிரிவினார் என்ன செய்கிறார்கள்???

- நாட்டை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்!

நாடு, மதம், கலாச்சாரம், நாகரிகம், சமூகம் ஆகியவற்றை பலவீனப்படுத்துகிறது!

நாட்டில் சாதி, மதத்தின் பெயரால் கலவரங்களை உருவாக்கி வருகின்றனர்.

- நாட்டை உடைத்திருக்கிறார்கள்!

நாட்டுச் செல்வம், மதப் பயம் என்ற பெயரில் கோயில்களில் வசூல் செய்து வருகின்றனர்!

1987 - போஃபர்ஸ் பீரங்கி ஊழல், 960 கோடி

1992 - பங்கு ஊழல், 5,000 கோடி.

1994 - சர்க்கரை ஊழல், 650 கோடி

1995 - முன்னுரிமை ஒதுக்கீடு ஊழல், 5,000 கோடி

1995 - சுங்க வரி மோசடி, 43 கோடி

1995 - கப்லர் ஊழல், 1,000 கோடி

1995 - தினார் / ஹவாலா ஊழல், 400 கோடி

1995 - மேகாலயா வன ஊழல், 300 கோடி

1996 - உர செவ்வக ஊழல், 1,300 கோடி

1996 - தீவன ஊழல், 950 கோடி

1996 - யூரியா ஊழல், 133 கோடி

1997 - பீகார் நில ஊழல், 400 கோடி

1997 - மியூச்சுவல் ஃபண்ட் ஊழல், 1,200 கோடி

1997 - சுக்ராம் டெலிகாம் ஊழல், 1,500 கோடி

1997 - SNC மின் திட்ட ஊழல், 374 கோடி

1998 - உதய் கோயல் விவசாய விளைபொருள் ஊழல், 210 கோடி

1998 - தேக்கு மரக்கன்று ஊழல், 8,000 கோடி

2001 - டால்மியா பங்கு ஊழல், 595 கோடி

2001 - UTI ஊழல், 32 கோடி

2001 - கேதன் பரிக் பத்திர ஊழல், 1,000 கோடி

2002- சஞ்சய் அகர்வால் வீட்டு முதலீட்டு ஊழல், 600 கோடி

2002 - கல்கத்தா பங்குச் சந்தை ஊழல், 120 கோடி

2003 - முத்திரை ஊழல், 20,000 கோடி

2005 - ஐபிஓ காரிடார் ஊழல், 1,000 கோடி

2005 - பீகார் வெள்ளப் பேரிடர் ஊழல், 17 கோடி

2005 - சார்பியன் நீர்மூழ்கிக் கப்பல் ஊழல், 18,978 கோடி

2006 - பஞ்சாப் சிட்டி சென்டர் ஊழல், 1,500 கோடி

2008 - கருப்புப் பணம், 2,10,000 கோடி

2008 - சத்யம் ஊழல், 8,000 கோடி

2008 - ராணுவ ரேஷன் ஊழல், 5,000 கோடி

2008 - ஸ்டேட் பேங்க் ஆஃப் சவுராஷ்டிரா, 95 கோடி

2008 - ஹசன் அலி ஹவாலா ஊழல், 39,120 கோடி

2009 - ஒரிசா சுரங்க ஊழல், 7,000 கோடி

2009 - அரிசி ஏற்றுமதி ஊழல், 2,500 கோடி

2009 - ஜார்க்கண்ட் சுரங்க ஊழல், 4,000 கோடி

2009 - ஜார்க்கண்ட் மருத்துவ உபகரண ஊழல், 130 கோடி

2010 - ஆதர்ஷ் வீடு ஊழல், 900 கோடி

2010 - உணவு தானிய ஊழல், 35,000 கோடி

2010 - பேண்ட் ஸ்பெக்ட்ரம் ஊழல், 2,00,000 கோடி

2011 - 2ஜி அலைக்கற்றை ஊழல், 1,76,000 கோடி

2011 - காமன் வெல்த் ஊழல், 70,000 கோடி

இந்த மோசடிகள் அனைத்தும் எந்த ஒரு வெளிநாட்டவரும் செய்யவில்லை, எந்த முஸ்லீமும் இல்லை, எந்த கிறிஸ்தவரும் இல்லை, எந்த SC, ST, OBC களும் இல்லை, இந்த மோசடிகள் அனைத்தும் போலி தேசபக்தியுள்ளவர்களால் செய்யப்பட்டுள்ளன. அதற்கு மேல், இடஒதுக்கீட்டால் நாடு பின்னோக்கிப் போகிறது என்று இந்த அயோக்கியர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள் (வலை வீசிப் படித்தது) ●

கவிதை

# மகனே இன்னும் உன் நினைவே!..

- வேணு.ஜெயராமன்

உழைத்து உழைத்து உன்னைப் படிக்க வைத்து
உண்ண உணவின்றி ஊருணியில்
நீர் அருந்தி.....
வாங்கிய ஊதியத்தில் வாடகை கொடுக்க வழியின்றி
வீட்டின் உரிமையாளரைக் கண்டால்
கொல்லைப் புறம் வழியாக.....

வெளியேறிய நாட்களை எண்ணி
வேதனைப் படவில்லை....
வெயிலில் உனக்கு கால் சுடுமென
தோளில் சுமந்து சென்றதை நினைத்து
வருத்தமில்லை
தோள்கள் சுருங்கிய போது உன்னை
நினைத்து வருந்துகிறேன்....

கைநிறைய ஊதியம் வாங்குகிறாய் நீ
கைப்பிடித்து வந்தவளோடு மகிழ்ச்சி
பொங்க வாழ்கிறாய்....
உன்னை பெற்ற எங்களை ஓரமாக
உட்கார வைக்கிறாய்
உன் புது சொந்தமெல்லாம் உரசிவிட்டு
செல்ல வைத்தாய்...

யார் பேச்சையோ கேட்டு பெற்றவரை
யாருமில்லாத அனாதையாக கருணை
இல்லத்தில் அமரவைத்தாய்....

எனக்கு வரும் ஓய்வூதியத்தை "ஏடிஎம்" ல் நீ பெற்று
மாதந்தோறும் கருணை இல்லத்திற்கு
எனக்கே தருகிறாய்.....

இப்போது கூட உன்னை நினைத்து-எம் மனம் கவலையாகிறது
வயதானால் நீ என்ன செய்யப் போகிறாய் மகனே!
போ!போ!! ஓய்வூதியம் வேண்டி போராடு....
அது மட்டும் தாம் துணை நமக்கு
இறுதிவரை....

ஓய்வூதியம் பெறும் போதே இப்படி ஆக்கிவிடாய்
ஓய்ந்து விட்டால் உன் நிலை என்னாகுமோ....
உன்னைப் பற்றியே பாழாய் போன எங்கள் மனம்
மறந்து போன செய்தி ஒன்று மகனே!

முதியோர் இல்லத்தில் காலியிடங்கள்
உள்ளது .....இன்று
அரசிடமும் காலிப்பணியிடங்கள்
உள்ளது....
முன் சொன்னது எதிர் காலத்தில் காலி
இருக்காது நிரம்பிடும்
பின் சொன்னது நிரம்பாது காலாவதி
ஆகிடும்.....
உணர்ந்து செயலாற்று... ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com